# கஞ்சியிலும்
# இன்பம்



# கஞ்சியிலும் இன்பம்

...MARA PUBLIC LIB.
7 JAN 1977

கி. வா. ஜகந்நாதன்

★

அமுத நிலையம் லிமிடெட்
1/45, இராயப்பேட்டை ஹைரோடு, சென்னை-14

உரிமை பதிவு
அமுதம்—2
மூன்ரும் பதிப்பு, செப்டம்பர்—1967

பொருள் அடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | பூசாரி வரம் | 1 |
| 2. | கல்யாண விளையாட்டு | 7 |
| 3. | மணமகளின் மிடுக்கு | 14 |
| 4. | மாமன் உறவு | 21 |
| 5. | கஞ்சியிலும் இன்பம் | 26 |
| 6. | அத்தான் விஜயம் | 31 |
| 7. | நகையும் மலரும் | 36 |
| 8. | வீரத்தின் தோல்வி | 42 |
| 9. | குடும்ப விரிவு | 46 |
| 10. | தெம்மாங்கு | 53 |
| 11. | சங்கேத சம்பாஷணை | 59 |
| 12. | மாமியாரும் மருமகளும் | 71 |
| 13. | பஞ்சை மகளிர் | 79 |
| 14. | பொங்கல் களியாட்டம் | 86 |

Y,73(P,31);351:g
K7

விலை ரூ. 1-75

நண்பர்கள் அச்சகம்
ஆழ்வார்பேட்டை சென்னை-1

7 - JAN 1977

# முன்னுரை

பல ஆண்டுகளாக நாடோடிப் பாடல்களைத் தொகுத்து வரும் முயற்சியில் நான் ஈடுபட்டிருப்பதை அன்பர்கள் அறிவார்கள். இதற்குமுன் "நாடோடி இலக்கியம்" என்ற பெயரோடு ஒரு புத்தகம் வெளியாகியிருக்கிறது. அது வெளியானபின் நாடோடிப் பாடல்களைப்பற்றிய கவனம் தமிழ் நாட்டினருக்கு அதிகமாகியிருப்பது தெரிந்து மகிழ்ச்சி அடைகிறேன். ரேடியோவில் மாதந்தோறும் நாடோடிப் பாடல்களைப் பாடுகிறார்கள். நாடோடிப் பாடல்களின் போலி பலவும் இப்போது நாட்டில் உலவுகின்றன. பலர் அவற்றையே நாடோடிப் பாடல்கள் என்று எண்ணிவிடுகின்றனர்.

கிராமத்திலே உள்ள மக்கள் வேலை செய்யும்பொழுதும் பொழுது போக்கும்பொழுதும் விளையாடும்பொழுதும் பாடும் நாடோடிப் பாடல்கள் இன்னாரால் இயற்றப் பட்டவை என்ற நியதிக்கு உட்படாதவை. காலந்தோறும் இடந்தோறும் பரவி, மாறியும் விரிந்தும் சுருங்கியும் வழங்குபவை. இயற்கையோடு ஒட்டி வாழும் உள்ளமும் வாழ்க்கையும் உடையவர்களுடைய உணர்ச்சியையும் செயல்களையும் வெளியிடும் அப் பாடல்கள் புலவர் உலகத்துக்குப் புறம்பே நிற்பவை. நிற்கிறது என்பதை நிக்குது என்றும், ஆயிற்றென்பதை ஆச்சு என்றும் மாற்றிக் கொச்சைமொழிகளை நிரப்பிப் பாடினால் நாடோடிப் பாட்டு ஆகிவிடுமென்று சிலர் நினைக்கிறார்கள். காட்டிலே மலரும் மலரைப்போலச் செயற்கையின் வேலைப்பாடுகளின்றி மலரும் பாடல்களாகிய அவற்றைப் போல நாகரிக வாழ்க்கையில் ஈடுபட்ட மக்கள் பாட முடியாது; அநுபவிக்கவே முடியாதே! குழந்தை பேசும் மழலைச் சொல்லைப்போல ஒருவர் பேச முடியுமானால் நாடோடிப் பாடல்களைப் போலப் புலவன் பாடலாம். இரண்டும் இயலாத காரியம்

உண்மையான நாடோடிப் பாடல்களைத் தொகுத்து வெளியிடுவதே என் நோக்கம். பாடல்களை விளக்கிக் காட்டும்போதுதான் இக்காலத்து ரசிகர்கள் அவற்றின் சிறப்பை உணர்கிருர்கள். ஆகையால், முன்பு '**சுதேச மித்திரன்**' வாரப் பதிப்பிலும், வேறு சில பத்திரிகைகளிலும் நாடோடிப் பாடல் விளக்கங்களை எழுதினேன். அவற்றில் ஒரு பகுதியே இந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகள். இனியும் தொடர்ந்து சில புத்தகங்கள் வெளியாகும்.

25—4—49
சென்னை

**கி. வா. ஜகந்நாதன்**

## குறிப்பு

இப்போது இதன் மூன்றும் பதிப்பு வெளியாகிறது. இதில் நான் யதொரு மாற்றமும் செய்யவில்லை. இதன் பின், "குழந்தை உலகம்", "மச்சு வீடு" என்ற பெயருடன் இரண்டு புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறேன். அவற்றிலும் பல நாடோடிப் பாடல்களின் விளக்கத்தைக் காணலாம்.

20—9—67
கல்யாண நகர்
சென்னை—28

**கி. வா. ஜகந்நாதன்**

1977

7 - JAN 1977

# கஞ்சியிலும் இன்பம்

## பூசாரி வரம்

"ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை, பூசாரி பாட்டுக்குப் பின்பாட்டு இல்லை" என்று தமிழ் நாட்டுப் பழமொழி சொல்கிறது. ஏற்றப் பாட்டு, பூசாரி பாட்டு என்னும் இரண்டும் புலவர்களாலும் பின்பற்றி இயற்ற முடியாத அமைப்பை உடையன. உணர்ச்சி ஒன்றையே ஆதாரமாக வைத்துத் தாளம் தவருமல் பாடும் அந்த நாடோடிப் பாட்டிலே தொடர்ச்சியாக ஒரு பொருளைப் பார்ப்பது அருமையிலும் அருமை. ஆனாலும் பாமர மக்களின் உள்ளத்தை அந்தப் பாடல்கள் பிணிக்கின்றன.

ஏற்றப் பாட்டுக்கும் பூசாரி பாட்டுக்கும் சில வேறுபாடுகள் உண்டு. ஏற்றக்காரன் வாத்தியத்தின் துணை ஒன்றும் இல்லாமல் ஒரு தொழிலைச் செய்து கொண்டே பாடுகிருன். அவனுக்கு அந்தப் பாட்டு முழுவதும் மனப்பாடமாக இருக்கும். பூசாரியோ பாடும் பொழுது உடுக்கை அடித்து ஆவேசம் கொண்டு பாடுகிருன். அப்படிப் பாடுவதுதான் அவன் தொழில். பல காலமாக வழங்கிய பாடல்களை அவன் சொல்வதோடு இடையிடையே தன்னுடைய கைச்சரக்கையும் சேர்த்துக் கொள்வான்.

இரண்டு பேர்கள் சேர்ந்து உடுக்கு அடிக்கும்போது அந்த இடம் முழுவதும் பெரிய உற்சாகம் நிலவும். ஆவேசம் வந்தவனைப்போல ஒருவன் உடுக்கடித்துப் பாடுவான்; ஒவ்வொரு வரிக்கும் மற்றொருவன் 'ஆமாமா' என்று பின்பாட்டுப் பாடுவான். ஒரு சரணம் முடிந்தவுடன் 'ஆமாமா'ப் போட்டவன் பாடுவான்; முன்னாலே பாடினவன் 'ஆமாமா'ப் போடுவான். இருவரும் ஒருவரை ஒருவர் விஞ்சிக்கொண்டு பாடுவார்கள். கூட்டத்தில் ஆரவாரமும் ஆவேசமும் அளவுக்கு மிஞ்சி எழும்.

✶

பூசாரி தமிழ்நாட்டில் தலைமுறை தலைமுறையாக வந்தவன். மிகப் பழங்காலத்திலும் அவன் உடுக்கடித்துப் பாட்டுப் பாடித் தெய்வங்களை வருவிப்பான். பெரும்பாலும் முருகனையே அவன் பூசிப்பான். தன் கையில் வேலை வைத்துக்கொண்டு ஆடுவான். இன்றும் கொங்கு நாட்டில் வேலை வைத்துக்கொண்டு ஆடும் வழக்கத்தைப் பார்க்கலாம். பூசாரி வேலை வைத்திருந்தமையால் அவனுக்கு வேலன் என்ற பெயரை முன்காலத்தில் அளித்திருந்தார்கள். தெய்வ விக்கிரகத்தைப் படிமம் என்று சொல்வார்கள். அதனைப் பூசை செய்வதனால் பூசாரிக்குப் படிமத்தான் என்றும் ஒரு பெயர் வழங்கி வந்தது.

மலை சூழ்ந்த இடங்களில்தான் பூசாரி மிகுதியாக வசித்து வந்தான். அந்தப் பகுதியைக் குறிஞ்சித்திணையென்று தமிழர்கள் வகுத்தார்கள். அதற்குத் தெய்வம் முருகன். முருகனுக்குக் கள்ளையும் ஊனையும் தினையரிசியையும் வைத்து ஆட்டைப் பலியிட்டுக் குறச்சாதியினர் வழிபடுவார்கள். அப்போது பூசாரி மணியடித்துத் துடி கொட்டி முருகனை ஆவேசமாக வரச்செய்வான்.

அரசன் யுத்தத்திற்குப் போவதற்குமுன்பும், யுத்தத்திலிருந்து வெற்றியோடு மீளும்பொழுதும் பூசாரி பூசை

போட்டு ஆடுவது வழக்கம். இந்த ஆட்டத்துக்கு வெறியாட்டு என்று பெயர்.

ஊரில் ஏதேனும் நோய் வந்தாலும், ஒரு குடும்பத்தில் ஏதாவது துன்பம் வந்தாலும் வேலனை வரவழைத்து முருகனுக்குப் பூசை போடச்செய்து கூத்தாடுவது அக்காலத்துக் குறவர் வழக்கம். தங்கள் பெண்ணுக்கு மணம் ஆவதற்கு முன்னால் வெறியாடுவதும் உண்டு.

இக்காலத்தில் பூசாரி மாரியம்மன், காளி முதலிய கிராம தேவதைகளைப் பூசிப்பவனாக இருக்கிறான். ஆவேசம் வந்து ஆடுவதும், உடுக்கடித்து வழிபடுவதும் இன்னும் இருக்கின்றன. அவன் பாடும் பாட்டுக்கள் தோத்திரமாகவும், பெரிய கதைகளாகவும் உள்ளன. பாரத ராமாயணக் கதைப் பகுதிகளைத் துரோபதையம்மன் திருவிழாவைப் போன்ற விழா நாட்களில் தொடர்ச்சியாகப் பாடும் பூசாரிகள் இன்றும் இருக்கிறார்கள். ஆவேசம் வந்து குறி சொல்லும் பூசாரிகளை இன்றும் சிற்றூர்களில் காணலாம்.

குறி சொல்லும் தொழிலும் பண்டைக் காலந் தொட்டே பூசாரிகள் பரம்பரைக்கு உரியதாக இருக்கிறது. வேலனைப் போலவே குறத்தியும் குறி சொல்வாள். பேய் பிடித்த பெண்களுக்கு இன்ன பேய்பிடித்ததென்று குறி சொல்லச் சங்ககாலத்து வேலனுக்குத் தெரியும். இந்தக் காலத்துப் பூசாரிக்கும் தெரியும்.

★

கிராமங்களில் தொழில் செய்து கூலி வாங்கிப் பிழைக்கும் ஏழை மக்களுக்குப் பூசாரிதான் குரு; அவன் தான் 'சோசியகாரன்'; அவனே பாட்டும் கதையும் சொல்லும் பாகவதன். தெய்வத்தின் திருவருளைவிட அவன் திருவருளே மிகவும் அவசியம். "சாமி வரங்

கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுக்கவில்லை" என்று பழமொழி சொல்வதைக் கேட்டதில்லையா?

தொழில் செய்வார் கூட்டத்தில் ஒரு பெண்ணுக்குக் கல்யாணம் செய்யவேண்டுமானால் முறைமைப் பிள்ளை யாரேனும் இருப்பான். அத்தை மகனைக் கொள்வது ஒரு வழக்கம். ஏதாவது காரணத்தால் அவனுக்குப் பெண்ணைக் கொடுக்க இயலாவிட்டால் இரண்டு குடும்பங்களுக்கும் பெரிய சண்டை வந்துவிடும். கல்யாணம் நடவாமல் தடுப்பதற்கு உரிய காரியங்களை எல்லாம் செய்வார்கள். இத்தகைய சண்டையால் மணமகனே பிணமகனாய், மணப்பறையே பிணப்பறையாய் முடிந்த கல்யாணங்களும் உண்டு.

வேறு வகையிலும் கல்யாணம் நடவாமல் செய்ய முயலும் விரோதிகள் இருப்பார்கள். ஆகவே, கல்யாணம் என்றால் அதுவும் சத்துருவை வென்று நிறைவேற்றும் போராட்டமாகவே நேரும். மனிதர் துணையோடு தெய்வத்தின் துணையையும் வேண்டிப் பூசாரியை அழைத்துப் பூசை போட்டு உடுக்கடிக்கச் சொல்லிக் கேட்பார்கள். பூசாரி தைரியமூட்டும் பாடல்களைப் பாடுவான். அவனுடைய தொனியே அச்சத்தை நீக்கித் தைரியத்தை உண்டாக்கும்.

✶

மருதமலை வீரப்பனைப் பூசாரி, பெண்ணுக்கு மணமுடிக்க வேண்டி அழைக்கிறான். பாட்டு, பின் பாட்டு, இடையிடையே உடுக்கின் 'பிம் பிம் பிம், பிம் பிம் பிம்' என்ற முழக்கம், ஜனங்களின் ஆரவாரம் எல்லாம் சேர்ந்து அந்த இடத்தை ஒரு போர்க்களரியைப் போலத் தோற்றச் செய்கின்றன.

பூசாரி பாடத் தொடங்குகிறான்.

ஏ மருதமலை வீரப்பா ஆ ஆ ஆ ஆ ஆ ஆ!
மணமுடிக்க வேண்டுமப்பா ஆ ஆ ஆ ஆ ஆ ஆ!
(பிம்பிம்பிம்—பிம்பிம்பிம் —பிம்பிம்பிம்)

உனக்கு ஆடுகோழி தாரேன்
ஒசந்த சாம்பிராணி தாரேன்
(பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்)

பாடுபட்டுப் பொங்கித் தின்னப்
பாப்பாத்தி கல்யாணம்
(பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்)

அது நல்லா முடிச்சு வச்சால்
நல்லவேட்டி ரெண்டு தாரேன்
(பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்)

நீ சத்துருவை மூக்காலே
வாயாலே ரத்தங் கொட்ட
(பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்)

ஐயா-ஊரைவிட்டுத் தான்ஓட்டி
உதவி செய்ய வாராயோ?
(பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்—பிம்பிம்பிம்)

சத்துருவை ஊரை விட்டு ஓட்டவும் பயமுறுத்தவும் மருதமலை வீரப்பனுக்கு இரண்டு வேட்டி வாங்கித் தருவதாகச் சொல்கிருன் பூசாரி. அந்த இரண்டு வேட்டியும் மருதமலை வீரப்பனு கட்டிக் கொள்ளப் போகிருன்? பூசாரி வீரப்பனல்லவா கட்டிக்கொண்டு குதூகலிக்கப் போகிருன்?

மருதமலை வீரப்பனை இப்படி அழைக்கும்போது அந்தச் சாமி மலையிலிருந்து இறங்கி வந்து பூசாரிக்குள்

புகுந்து விடுகிறது. பூசாரி ஆவேசம் கொண்டு துள்ளிக் குதிக்கிறான். மற்றொருவன் உடுக்கடிக்கிறான். இனிமேல் பூசாரி பேசுவதெல்லாம் சாமியின் வார்த்தை. சாமி இதோ குறி சொல்கிறது. தைரியம் சொல்கிறது. நம்பிக்கை ஊட்டுகிறது. என்ன கலகம் வந்தாலும் காப்பாற்றுவதாக வாக்களிக்கிறது. கல்யாணம் செய்து வைப்பதோடு நில்லாமல், மேலும் தம்பதிகளுக்குப் பிள்ளைவரங்கூடக் கொடுக்கிறது. பெண்ணைப் பெற்றவர்களுக்கு வேறு என்ன வேண்டும்?

*சத்ரு பயம்கொஞ்சம் உண்டு — ஆனால்*
*சாதித்துச் சங்கடம் போக்கிவைப் பேன்நான்.*
*எத்தனை பேர்கள்வந் தாலும் - இந்த*
*எனக்குச் சமானமாய்க் கறுப்புகள் உண்டோ?*
*கல்யாணம் செய்துவைப் பேன்நான் — எந்தக்*
*கலகம் வந்தாலும் கலங்கவே வேண்டாம்.*
*கறுப்பனென் றென்னையெண் ணிக்கொள் - அந்தக்*
*காட்டேறி வீரன்சா முண்டிமா காளி*
*என்னாலே என்னஆ காது - எவன்*
*என்ன விரோதத்தைச் செய்தாலும் அப்பர்*
*புள்ளை பிறவாதென் றாலும் - நல்ல*
*புத்திரன் புத்திரி நான்தரு வேனே!*
*அஞ்சாதே அஞ்சாதே அம்மா!*

பூசை போட்டுச் சாமி வரம் கொடுத்துவிடவே பூசாரிக்கு வேட்டியும் பணமும் கொடுத்து அவனை வணங்கி வழிபடுகிறார்கள். அவன் இருந்துதானே கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டும்? பூசாரி வரம் கொடுத்து விடுகிறான். முகூர்த்தம் நிறைவேறிச் சாமி சொன்ன காரியங்களெல்லாம் நடைபெற்றுவிடும் என்ற நம்பிக்கை அந்தப் பாமர மக்களுக்கு இனி எந்தக் காலத்திலும் தளராது.

# கல்யாண விளையாட்டு

ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு சாதியிலும் கல்யாண சம்பிரதாயங்களும் சடங்குகளும் வெவ்வேறு விதமாக இருக்கும். பழங்கால மக்கள் எந்தச் சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து வந்தார்கள் என்பதை இலக்கியம் எடுத்துரைக்கிறது. அங்கங்கே நாகரிக மக்களுக்குப் புறம்பாகக் காடுகளிலும் நாடுகளிலும் வாழ்ந்துவரும் பழங்குடி மக்களிடத்தும் அந்தப் பழைய வழக்கங்களிலே சிலவற்றைப் பார்க்கலாம்.

பழைய வழக்கங்களை இலக்கியங்களில் காண்பதோடு பழமொழிகளிலும் விளையாட்டுக்களிலும் காணலாம். நாட்டு நடப்பில் இருந்த செயல்களைக் குழந்தைகள் அபிநயித்து விளையாடுவது இயல்பு. அகமுடையான் பெண்டாட்டி விளையாட்டு, கல்யாண விளையாட்டு முதலியவற்றில் வயசான மக்களுடைய பழக்க வழக்கங்களையே குழந்தைகளும் நடித்துப் பார்க்கின்றன. அந்த விளையாடல்களுக்கு ஏற்ற பாடல்கள் வேறு உள்ளன. அவைகளும் அந்த வழக்கங்களைப் புலப்படுத்துவனவாக இருக்கும். பாட்டும் விளையாட்டும் பழைய காலமுதல் விசேஷ மாறுதலைப் பெருமல் இருக்க, வாழ்க்கையில் மாத்திரம் அந்தச் சம்பிரதாயங்கள் மாறிப் போவதுண்டு. அந்தப் பாடல்களையும் விளையாட்டையும் கொண்டு பண்டைக் காலத்து வழக்கங்களை ஊகித்து உணரலாம். மனித இன ஆராய்ச்சி நூல்வல்லார் (Anthropologists) அவற்றைக் கொண்டு ஆராய்ந்து பல செய்திகளை வெளிப்படுத்துகிருர்கள்.

தமிழ் நாட்டில் பழங்காலத்தில் கல்யாணத்தில் மணப் பெண்ணுக்குப் பரிசம் வைத்து மணப்பது எல்லாச் சாதியாரிடத்தும் வழக்கமாக இருந்தது. பிற்காலத்தில் சில வகுப்பினரிடம் இது மாறி வரதக்ஷிணை வாங்கும் வழக்கம் ஏற்பட்டது. மாமன் மகளை மணப்பது உரிமையாகப் பல சாதியினர் வைத்திருந்தார்கள். சில சாதியினர் அப்படிச் செய்வதில்லை. மாமனை மணக்கும் வழக்கம் சிலருக்கு விலக்கு; சிலருக்கு உடன்பாடு.

இப்படியாக வந்த வழக்கங்கள் சிலவற்றை நாடோடிப் பாடல்களால் உணரலாம். ஏழை மக்களின் பெண்கள் கல்யாண விளையாட்டு விளையாடுவார்கள். இடையிடையே பாடல்கள் வரும். அவற்ருல் பல செய்திகள் தெரியவருகின்றன.

★

பெண் வீட்டார் என்றும் பிள்ளை வீட்டார் என்றும் இரண்டு கட்சிகள் வகுத்துக்கொண்டு இந்த விளையாட்டு ஆடுவார்கள்.

பெண்ணுக்குத் தாய் பிள்ளை வீட்டாரை அணுகி அவர்களோடு பேச்சுக் கொடுத்துப் பழக்கம் செய்து கொள்ளுகிருள். அதற்கு ஏதாவது ஒரு சாக்கு வேண்டுமே! "நான் ஒரு மாயக் குறவனுக்கு மனைவியாகப் புகுந்தேன்; வாயில்லாப் பூச்சியாகிய பெண்ணைப் பெற்றேன்; குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு என் தலை மேல் விழுந்தது; வெயிலில் அலைந்து திரிந்து கூலி வேலை செய்தேன். தலை காய்ந்துபோயிற்று. கொஞ்சம் எண்ணெய் வாருங்கள்" என்று கேட்பாள். இதிலிருந்து கல்யாண விளையாட்டு ஒரு நாடகம்போலத் தொடர்ந்து நடைபெறும்.

★

**பெண்ணின் தாய் கூறுவது :**

கிளிகளெல்லாம் பழத்துக்குப் போனேண்டி அப்பி
கிளி யோட கிளிவந்து சேந்தோண்டி அப்பி
மாயக் குறவனுக்குப் புகுந்தேண்டி அப்பி
வாயில்லாப் பூச்சியைப் பெத்தேண்டி அப்பி
காபிரிக்கா மட்டைவெட்டித் - தலை
காஞ்சுபோச்சு, கொஞ்சம் எண்ணெய் வாரு.

**பிள்ளை வீட்டுக்காரர் :**

இப்பத்தான் எள்ளைக்
கழனிக்கு எடுத்துப்
போயிருக் காங்க.

**பெண் வீட்டார்:**

[மேலே சொன்ன பாடலைச் சொல்வார்கள்.]

**பிள்ளை வீட்டார் :**

இப்பத்தான்
என்ளு விதைத்திருக்குது.

[பெண் வீட்டார் போய்விட்டு மீட்டும் வந்து பாட்டைப் பாடுவார்கள். பிள்ளை வீட்டார் பின்வரும் காரணங்களை ஒவ்வொன்ருகச் சொல்லி அலைக்கழிப்பார்கள்.]

இப்பத்தான் முளை கிளம்பியிருக்குது
இப்பத்தான் ரெண்டிலை விட்டிருக்குது
இப்பத்தான் அரும்பு விட்டிருக்குது
இப்பத்தான் பூப்பூத் திருக்குது
இப்பத்தான் காய்காய்த் திருக்குது
இப்பத்தான் அறுத்துக் களத்திலே போட்டிருக்குது
இப்பத்தான் செக்காடி வந்திருக்குது

நடுவீட்டில் வச்சுக் கற்பூரம்
கொளுத்தித்தான் தரவேணும்.

பிறகு கொஞ்சம் எண்ணெய் கொடுக்கத் தலையில் தேய்த்துக்கொள்வார்கள்.

இந்த மாதிரி பல முறை வந்து வந்து எண்ணெய் கேட்டதனால் இரண்டு குடும்பத்தினருக்கும் பழக்கம் அதிகமாகிறது. பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் பெண் இருப்பதை உணர்ந்து கொண்டு தங்கள் பிள்ளைக்குப் பெண் கேட்க எண்ணுவார்கள். ஒரு நாள் அப்படியே போய்ப் பெண் கேட்பார்கள்.

பிள்ளை வீட்டார் :

ஒற்றைச் செருப்பாலே வந்தோம் நாங்கள்
ஓரடி வில்லாலே வந்தோம் நாங்கள்
மாஞ்சுருளாலே வந்தோம் நாங்கள்
மல்லிப்பூச் செண்டாலே வந்தோம் நாங்கள்
பேரிட்ட மாமியார் வந்தோம் நாங்கள்
பெண்ணுக்கு நாத்தனார் வந்தோம் நாங்கள்
பெண்ணைக்கொடு - தங்கம்
பெண்ணைக்கொடு.
ரெட்டைச் செருப்பாலே வந்தோம் நாங்கள்
ரெண்டடி வில்லாலே வந்தோம் நாங்கள்
மாஞ்சுருளாலே வந்தோம் நாங்கள்

[முன் வந்த அடிகளையே மீட்டும் பாடுவார்கள்.]

பெண் வீட்டார்:

ஒற்றைச் செருப்பாலே வந்தால் என்ன?
ஓரடி வில்லாலே வந்தால் என்ன?
மாஞ்சுருளாலே வந்தால் என்ன?
மல்லிப்பூச் செண்டாலே வந்தாலென்ன?

பேரிட்ட மாமியார் வந்தால் என்ன?
பெண்ணுக்கு நாத்தனார் வந்தால் என்ன?
பெண் இல்லை-தங்கம்
பெண் இல்லை.
ரெட்டைச் செருப்பாலே வந்தால் என்ன?

[முன் மாதிரியே எல்லா அடிகளும் வரும்.

தாங்கள் பெண்ணைத் தேடிக்கொண்டு வந்த சிரமத்தை எடுத்துக் கூறிப் பெண் வீட்டார் உள்ளத்தில் இரக்கம் உண்டாக்க முயன்ற பிள்ளை வீட்டார், தங்கள் கருத்து நிறைவேறுமல் போகவே யோசித்துப் பார்க்கிறார்கள். "பெண்ணுக்குப் பரிசம் போட்டால்தான் இவர்கள் வழிக்கு வருவார்கள். பொன்னும் பூவும் தருவதாகச் சொல்லலாம்" என்று சம்பிரதாயத்தை நினைந்து, சொல்ல ஆரம்பிக்கிறார்கள்.

பிள்ளை வீட்டார்:

ஒரு கழஞ்சுப் பொன்னுந் தாரேன்
வாயேன் மருமகளே
ஒரு கழஞ்சுப் பூவுந் தாரேன்
வாயேன் மருமகளே!

[கழஞ்சு என்பதைக் கரண்டி யென்றும் கிளிஞ்ச லென்றும் பாடுவதுண்டு.]

பெண் வீட்டார் :

ஒரு கழஞ்சுப் பொன்னைக் கண்டு
ஆற்றுவனோ தாற்றுவனோ
ஆறுகடலாய்க் காய்ச்சுவனோ!
சின்னண்ணன் காலுக்குச் சிலம்படிக்கப் பத்தாது
பெரியண்ணன் கைக்குப் பெரம்படிக்கப் பத்தாது

கூடத்தெங் கக்காளுக்குக் கொப்புசெய்யப் பத்தாது
மாடத்து அக்காளுக்கு மணிசெய்யப் பத்தாது
குப்பையிலே மேய்ந்துவருங் கோழிக்கும் பத்தாது
மந்தையிலே மேய்ந்துவரும் மாட்டுக்கும் பத்தாது
பத்தாப் பறையனுக்குப் படியளக்கப் பத்தாது.

**பிள்ளை வீட்டார்:**

பின்னே, என்ன வேணும்?

**பெண் வீட்டார் :**

ஐந்நூறு ரூபாய் பெறுமான ஜடைநாகம்
அதுக்கேற்ற சூரியப்பிறை சந்திரப்பிறை
இருந்தால் போதும்.

காதுக்கேற்ற கல்இழைத்த கம்மல் வேணும்
அதுக்கேற்ற வைர மாட்டல்
இருந்தால் போதும்.

கழுத்துக்கேற்ற ஐந்நூறுரூபாய் பெறுமான அட்டிகையும்
அதுக்கேற்ற காசுமாலை கெச்சைகளும்
இருந்தால் போதும்.

இடுப்புக்கேற்ற ஒட்டியாணம் இருந்தால் போதும்
அதுக்கேற்ற சாவிபடல்
இருந்தால் போதும்.

கைக்கேற்ற காப்பு வேணும்
அதுக்கேற்ற ஐந்நூறு ரூபா பெறுமான
மோதிரமும் வேணும்.

காலுக்கேற்ற காப்புக் கொலுசு வேணும்
அதுக்கேற்ற வெங்காயம்பீலி
இருந்தால் போதும்.

"போதும், போதும்" என்று வார்த்தை வருகிறதே யன்றி ஆசை வளர்ந்துகொண்டே செல்கிறது. தலை முதல் கால்வரையில் அவர்களுக்குத் தெரிந்த நகைகளை யெல்லாம் அடுக்கி விடுகிறார்கள். இவைகளைப் போடு வதற்குப் பிள்ளை வீட்டார் இணங்க வேண்டும்.

பொம்மைக் கல்யாணமாக இருந்தாலும் நகை களுக்குக் குறைவு வரக்கூடாது. இதோ ஒரு பாட்டு, பொம்மைக்கு வேண்டிய நகைகளைச் சொல்கிறது:

*பொம்மைக்குக் கல்யாணம் புரியவே வேணும்*
*கம்மல் ஜிமிக்கி கைக்குப்பொன் பாட்டில்*
*செம்மைப் பட்டாடை சிவப்புச்சிற் றாடை*
*அம்மணி வாங்கி அருளடி எனக்கே.*

நகைகளைப் போடுவதாக வாக்களித்தவுடன் கல்யா ணம் நிச்சயமாகி விடுகிறது.

[இதில் வரும் பாடல்களை எனக்குச் சொன்னவள் மந்தைவெளி முனியம்மாள்.]

# மணமகளின் மிடுக்கு

கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. பரிசம் போட்டுப் பெற்ற விலைப் பண்ட மாகிய மணப் பெண்ணின் மதிப்பு ஏறுகிறது. வாழ்க் கையில் மாமியாருடைய தொல்லையினுல் உடலும் உள்ள மும் குன்றிப்போகப் போகிருள் அவள். ஆனல் இப்போதோ அவள் ராணியைப்போல இருக்கிருள். மிடுக்கான வார்த்தைகளைப் பேசுகிருள். தன்னுடைய தயை பிள்ளை வீட்டாருக்கு அவசியம் என்பதை உணர்ந்து அதிகார தோரணையோடு வார்த்தை சொல் கிருள்; 'பிகு' பண்ணுகிருள். மருமகள் கூட்டத்தாரையே கிடுகிடுக்க வைக்கும் மாமியார் அவளிடம் நயந்து போகிருள். அவள் தன் வீட்டு எல்லையை மிதித்த பிறகல்லவா இருக்கிறது தண்டனை? மாமியாரின் சொரூபம் அப்பொழுது நன்ருக வெளிப்படும்.

இப்பொழுதோ எப்படியாவது தன் பிள்ளைக்கு ஒரு மனைவியைத் தேடி மணம் செய்துவிட வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு அவள் இருக்கிருள். அவள் இப் போது பணிந்து நடப்பதைக் கண்டு ஏமாறக்கூடாது. புலி பதுங்குவதெல்லாம் பாய்வதற்குத்தானே?

கல்யாண மண்டப அலங்காரங்கள் பூர்த்தியாயின. சடங்குக்கு வேண்டிய பண்டங்களெல்லாம் வந்து நிரம்பி யிருக்கின்றன. மஞ்சள், குங்குமம், கூறைப்புடைவை, ரவிக்கை, சந்தனம், பூ எல்லாம் வந்திருக்கின்றன. புரோ

கிதரும் வந்துவிட்டார். மணமகனும் வந்து மணையின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். இன்னும் மணப் பெண் வரவில்லை.

அவள் கோபித்துக் கொண்டிருக்கிறாளோ? போய் அழைத்துவரச் சொல்கிறார்கள். யார் போவது? நேரே மாமியாரே போகிறாள். மாமியார் போய் அழைப்பதைக் காட்டிலும் உயர்ந்த மரியாதை இல்லையே!

மாமியார் வந்துவிட்டாள் என்று மருமகள் அஞ்சு கிறாளா? இல்லை. அவள் பின்னும் முறுக்காக இருக் கிறாள். அவர்களிடையே ஒரு சம்பாஷணை நடக்கிறது.

*சீப்பு வந்து சிக்கில் இருக்குது*
*வாடி மருமகளே! வாடி மருமகளே!*
*சீப்பு வந்து சிக்கில் இருந்தால்*
*எனக்கென்ன உனக்கென்ன?*

*காக்காய் கையில் கொடுத்தனுப்பு.*

*கட்டுக் கயிறுவந்து கொடியில் இருக்குது*
*வாடி மருமகளே! வாடி மருமகளே!*

*கட்டுக் கயிறு வந்தால் எனக்கென்ன?—அது*
*கொடியி லிருந்தால் எனக்கென்ன?*

*காக்காய் கையில் கொடுத்தனுப்பு.*

*பூ வந்து தட்டில் இருக்குது*
*வாடி மருமகளே! வாடி மருமகளே!*

*பூ வந்தால் எனக்கென்ன—அது*
*தட்டில் இருந்தால் எனக்கென்ன?*
*காக்காய் கையில் கொடுத்தனுப்பு.*

*மாலை வந்து மடியில் இருக்குது*
*வாடி மருமகளே! வாடி மருமகளே!*

மாலை வந்தால் எனக்கென்ன—அது
மடியில் இருந்தால் எனக்கென்ன?
காக்காய் கையில் கொடுத்தனுப்பு.

குங்குமம் வந்து சிமிழில் இருக்குது
வாடி மருமகளே! வாடி மருமகளே!
குங்குமம் வந்தால் எனக்கென்ன?—அது
சிமிழில் இருந்தால் எனக்கென்ன?
காக்காய் கையில் கொடுத்தனுப்பு.

மஞ்சள் வந்து தட்டில் இருக்குது
வாடி மருமகளே! வாடி மருமகளே!
மஞ்சள் வந்தால் எனக்கென்ன—அது
தட்டில் இருந்தால் எனக்கென்ன?
காக்காய் கையில் கொடுத்தனுப்பு.

கூறை வந்து கொடியில் இருக்குது
வாடி மருமகளே! வாடி மருமகளே!
கூறை வந்தால் எனக்கென்ன?—அது
கொடியில் இருந்தால் எனக்கென்ன?
காக்காய் கையில் கொடுத்தனுப்பு.

ரவிக்கை வந்து தட்டில் இருக்குது
வாடி மருமகளே! வாடி மருமகளே!
ரவிக்கை வந்தால் எனக்கென்ன?—அது
தட்டில் இருந்தால் எனக்கென்ன?
காக்காய் கையில் கொடுத்தனுப்பு.

தாலி வந்து தரையில் இருக்குது
வாடி மருமகளே! வாடி மருமகளே!
தாலி வந்தால் எனக்கென்ன?—அது
தரையில் இருந்தால் எனக்கென்ன?
காக்காய் கையில் கொடுத்தனுப்பு.

*பாப்பான் வந்து பஞ்சாங்கம் சொல்கிறான்*
*வாடி மருமகளே! வாடி மருமகளே!*
*பாப்பான் வந்தால் எனக்கென்ன? அவன்*
*பஞ்சாங்கம் சொன்னால் எனக்கென்ன?*
*போபோ மாமி அத்தே!*
*மாப்பிள்ளை வந்து மணைமேல் இருக்கிறான்*
*வாடி மருமகளே! வாடி மருமகளே!*
*மாப்பிள்ளை வந்தால் எனக்கென்ன? அவன்*
*மணைமேல் இருந்தால் எனக்கென்ன?*
*போபோ மாமி அத்தே!*

இப்படிப் பிணங்கிக் கொண்டிருக்கும் கல்யாணப் பெண்ணுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லி மனம் குழையவைத்து மாமியார் எப்படியோ அழைத்துக் கொண்டு போய்விடுகிறாள். மகா சாகசக்காரியாகிய அவளுக்கு 'மசியாத' பேர்வழியும் இருக்கிறார்களா உலகத்தில்? கல்யாணம் விமரிசையாக நிறைவேறுகிறது.

★

கல்யாணம் ஆனவுடன் பெண்வீட்டார் பெண்ணைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துப் போகிறார்கள். பெண்ணுக்கு மீட்டும் மாமியார் வீட்டுக்குப் போக விருப்பம் இல்லை. பிள்ளை வீட்டார் வந்து அவளை அனுப்ப வேண்டுமென்று கேட்கிறார்கள். பெண் வீட்டார் பெண்ணை அனுப்பாமல் இருப்பதற்குச் சில காரணங்களைச் சொல்கிறார்கள்.

**பிள்ளை வீட்டார்:**

*மாட்டு வண்டி அனுப்புகிறேன்*
*அனுப்பிடுங்க எங்கள் பெண்ணை.*

**பெண் வீட்டார்:**

*மாட்டு வண்டியைக் கண்டாக்க*
*மயங்குமே எங்கள் பெண்ணு.*

பி. வீ. :

குதிரை வண்டி அனுப்பிடறேன்
அனுப்பிடுங்க எங்கள் பெண்ணை.

பெ. வீ. :

குதிரை வண்டியைக் கண்டாக்கக்
குலுங்குமே எங்கள் பெண்ணு.

பி. வீ. :

சார்ட்டு வண்டி அனுப்பிடறேன்
அனுப்பிடுங்க எங்கள் பெண்ணை.

பெ. வீ. :

சார்ட்டு வண்டியைக் கண்டாக்கச்
சாயுமே எங்கள் பெண்ணு.

கடைசியில் ரதம் அனுப்புவதாகச் சொல்வார்கள். பெண் வீட்டார் சமாதானம் அடைந்து பெண்ணை அனுப்பச் சம்மதிப்பார்கள்.

★

சில சமயங்களில் மாப்பிள்ளையே தன் மனைவியை அழைத்துப்போக வருவதுண்டு. வரும்போது தன் மாமனர் வீட்டில் இல்லாததைக் கண்டு மனைவியைக் கேட்கிருன். அவள் பதில் சொல்கிருள்.

லப்பைப் பெண்ணே லவங்கப் பூவே
அப்பன் எங்கே போனண்டி?
வெள்ளி மலையோரம்
வெற்றிலையாம் கொடி பிடுங்க.

தன் மருமகன் வந்திருப்பதைத் தெரிந்து உள்ளே இருந்த மாமியார் உடனே அவனை உண்ண அழைக்கிருள். "எனக்காக அதிக விருந்து ஒன்றும் வேண்டாம். உங்கள் வீட்டுக்கு என்ன பண்ணியிருக்கிறீர்களோ, அதுவே போதும்" என்று அவன் சொல்கிருன். அவன் புதிய மாப்பிள்ளை அல்ல; அதோடு பெண்ணுக்கு மதிப்பு

ஏற்பட்ட காலம் இது. அவன் பெண் வீட்டாருக்குக் 'குலாம்' ஆகிவிடுகிருன்.

உண்ண வா மருமகனே?
பண்ணினது போதும் அத்தே!

மருமகன் சாப்பிடுகிருன். சாப்பிடும்போது மெல்லத் தன் விருப்பத்தை வெளிப்படுத்துகிருன்.

பெண்ணை அனுப்பாயோ
பெற்ருேரே சொல்லுங்கள்!

மாமியாருக்கு இப்போது கோபம் வருகிறது. தன் பெண்ணுக்கேற்ற செல்வமும் சௌகரியங்களும் அவன் வீட்டில் இல்லை என்பதை எடுத்துச் சொல்லத் தொடங்குகிருள். "உங்கள் வீட்டில் தலைக்கு எண்ணெய் இல்லையாம்! சீவிச் சிக்கறுக்கச் சீப்பில்லையாம்! பூசிக் கொள்ள மஞ்சள் இல்லையாம்! இப்படித் தரித்திரம் பிடுங்கித் தின்னும் வீட்டில் எங்கள் செல்வப் பெண் எப்படி வந்து இருப்பாள்? அவள் இங்கே எப்படி இருந்தாள் தெரியுமா? ஆஹா! வாரி முடித்துக் கொண்டை போட்டுக்கொண்டு வாசலிலே வந்து நின்ருளானல் வீதி முழுவதும் அவள் அழகு சுடர்வீசும். இந்தச் சந்திலுள்ளார் எல்லோரும் அவள் அழகிலே மயங்கிஅடிமையாகி விடுவார்கள். அவள் மேனி சந்தனத்தை வென்று விடுமே! பூஞ்சரத்தைத் தோல்வியுறச் செய்யுமே!"— இந்தக் கருத்தையே பாட்டாகச் சொல்கிருள்.

எண்ணெய் இல்லை சீப்பும் இல்லை
இளந்தேங்காய் மஞ்சள் இல்லை.
வாரி முடித்துக்கொண்டு
வந்திருப்பாள் சந்தினிலே.
சந்தை விலைமதிப்பாள்
சந்தனத்தைத் தோற்கடிப்பாள்.
பூவை விலைமதிப்பாள்
பூஞ்சரத்தைத் தோற்கடிப்பாள்!

மருமகன் மாமியாருக்கு வேண்டிய சமாதானங்களைச் சொல்லி மனைவியை அழைத்துக்கொண்டு போய்விடுகிருன். அங்கே மணப்பெண்ணின் அகங்காரமும், மிடுக்கும் தவிடுபொடியாகின்றன. மாமியார் கையில் அகப்பட்டு நெஞ்சம் குலைகிருள் அவள்.

பொறுக்க முடியவில்லை அங்குள்ள தொல்லைகள். பெண் தன் காதலன்பால் முறையிடுகிருள்.

''நாளைக்கே என் பிறந்த வீட்டுக்குச் சொல்லி அனுப்புங்கள். அவர்கள் ரதம் அனுப்புவார்கள். நாம் இருவரும் ஏறிக்கொண்டு போய்விடலாம். இந்தச் சிறை வாசத்திலிருந்து விடுதலை பெறலாம். என் பின்னலே பேசாமல் வந்திடுங்கள். அங்கே என்ன குறை? எங்கள் வீட்டில் பாலாறு தேனுருக ஓடுகிறது. மந்தை நிறைய மாடுகள் இருக்கின்றன. உங்களைக் கவனித்துக்கொள்ள மந்திரியைப்போல நான் இருக்கிறேன். என்னுடைய அழகு உங்களுக்கு இன்பம் தரும். இயற்கை அழகோடு செயற்கையழகுக்கும் குறைவில்லை. கொண்டை நிறையப் பூச் சூட்டிக்கொண்டு உங்கள் கண்ணைக் குளிர்விப்பேன். நீங்கள் ராஜாவைப்போல ஆனந்தமாக இருக்கலாம்'' என்று சொல்கிருள்.

*சின்னச் சின்னச் செடிகுலுங்க,*
*சித்ரமணி ரதங்குலுங்க*
*வன்னி மரம்குலுங்க*
*வந்திடுங்க என் பிறகே!*
*மந்தையிலே மாடிருக்க*
*மந்திரிப்பெண் தானிருக்கக்*
*கொண்டையிலே பூவிருக்க,*
*குற்றமென்ன ராஜாவே?*

பணக்கார வீட்டில் பிறந்தோம் என்ற பெருமிதத்திலே வருகிறது பேச்சு. ''வந்திடுங்க என் பிறகே!'' என்ற வார்த்தை அதிகாரத்தொனியோடு ராணி ஒருத்தி பேசுவதைப்போலத் தோன்றவில்லையா?

## மாமன் உறவு

சில சாதியினரில் மாமனைக் கல்யாணம் செய்து கொள்ளும் வழக்கம் தமிழ் நாட்டில் இருக்கிறது. அதனை உரிமையாகக் கொண்டாடுவோரும் உண்டு.

வீட்டுக்கு மாப்பிள்ளையாக வரக்கூடியவர்களைப் பரி காசம் செய்வது நாட்டு வழக்கம். அத்தானை ஏசுவது, மாமனை ஏசுவது, மாப்பிள்ளையை ஏசுவது ஆகியவை யாவும் அவர்களிடத்திலே அந்த வீட்டாருக்கு உள்ள பிரியத்தையும், அந்தப் பிரியத்தை ஏற்றுக்கொண்டு பரிகாசங்களைப் பொறுத்து அப்போது விளையும் ஹாஸ்ய உணர்ச்சியிலே அவர்கள் கலந்துகொள்ளும் உயர்ந்த இயல்பையும் புலப்படுத்துவன. ஏசுவாருக்கு இன்பம், ஏசப்படுவோருக்குத் துன்பம் என்ற நியதி அன்பு இல் லாத இடத்தில் இருக்கும். இங்கே இருசாராருக்கும் இடையே தளர்வில்லாத அன்புப் பற்று வலியதாக இருப்பதால் ஏசலால் இரு சாராருக்குமே இன்பம் உண்டாகின்றது.

மாமனைப் பரிகாசம் செய்தும் கிண்டல் செய்தும் பாடும் பாடல்கள் சமூக நிலைக்கு ஏற்றபடியாகவும் சீமைக்குத் தக்கனவாகவும் வேறு வேறு சுவையுடையன வாகவும் அமைந்திருக்கும்.

★

கல்யாணம் பண்ணிக்கொண்ட மாமனுக்கு ஒரு பெண் உபதேசம் செய்கிறாள். அடிக்கடி மாமனார் வீட்டுக்குப் போனால் கௌரவம் போய்விடுமென்பதைத் தெரிவிக்கிறாள்.

*மர்மர் மாமா பன்னுடை*
*மாமியார் வீட்டுக்குப் போவாதே*
*நாணயம் மெத்தப் பேசாதே*
*நாக்கை அறுத்துக்கொண்டு சாவாதே*
*சுக்கங் காயைத் தின்னுதே*
*சுவரில் இடிச்சுண்டு சாவாதே.*

★

மாமனுடைய அழகான சந்தனப் பொட்டையும் சரிகைத் தலைப்பாகையையும் பாராட்டி அவனுடன் பேச விரும்புகிருள் இதோ ஒரு பெண்.

*மாமாடா மாமா*
*மாமரமாஞ் சோலை*
*நீவரும் வேளை*
*நிலைக்கண் ணுடி*
*சந்தனப் பொட்டு*
*சரிகைத் தலைப்பாகை*
*உன்னோடு பேசி*
*ஒருமாசம் ஆச்சு*
*உட்கார்ந்து பேசடா*
*மிக்கான மாமா!*

மாமனோடு உறவு கொண்டாடி அவனிடம் பரிசுப் பொருளைக் கேட்கத் துணிந்து விடுகிருள் ஒருத்தி. காலாழியும், துப்பட்டியும், உலக்கையும் வாங்கித் தரும் படி உத்தரவு போடுகிருள்.

*காலா காலத்திலே—மாமாடா*
*காலாழி விற்குதடா*
*காலாழி வாங்கித் தந்தால்—மாமாடா*
*காலிலே போட்டுப் பார்ப்போம்!*
*தூரா தூரத்திலே—மாமாடா*
*துப்பட்டி விற்குதடா!*

துப்பட்டி வாங்கித் தந்தால்—மாமாடா
    தோளிலே போர்த்திப் பார்ப்போம்!
ஊரா ஊரினிலே—மாமாடா
    உலக்கை விற்குதடா
உலக்கை வாங்கித்தந்தால்—மாமாடா
    குலுக்கி மாஇடிப்போம்!

★

மாமனின் உடம்பு வாட்டத்தைக் கண்டு அங்கலாய்த்து, வறுத்த கொள்ளைத் தின்னத் தந்து பரிகாசம் செய்யும் பாவை ஒருத்தியின் பாட்டு வருமாறு :

வா மாமா போமாமா
    வாசற்படியில் உட்காரு மாமா
    வாடிப்போய் விட்டாயே மாமா
கொள்ளு வறுத்திருக்கிறேன் மாமா
    கொடுக்கிறேன் கொரிமாமா
    குறத்தி வீட்டுக்குப் போமாமா.

மற்றொருத்தி அவன் வாங்கின சேலையைப் பழித்து அவனது உருமாலையையும் சந்தனப் பொட்டையும் பாராட்டி, "போதும் உன் பேச்சு!" என்று ஊடுகிறாள்.

மாமாடா மாமா
    நீ வருகிற வேளை
நீ வாங்கின வாழை
    நீ வாங்கின சேலை
நீ தான்பார்க்க வேணும்!
    நீ அந்த ருமாலை கட்டு
நீ வை சந்தனப் பொட்டு
    நிலகிரிக்குக் கம்பி நீட்டு
உன் பேச்சு மட்டு!

★

கொய்யாப்பழம் வாங்கித் தரும்படி உரிமையோடு கேட்கிறாள் ஒருத்தி. மேல் வேட்டியை அடகு வைத்தாவது வாங்கித் தரவேண்டுமாம்!

*கோடையிலே கொய்யாப் பழம்*
*விற்குதடா மாமா*
*தோவத்தியை அடகு வைத்து*
*வாங்கித்தாடா மாமா!*

★

மாமனைப் பற்றிய வேறு சில பாடல்கள் :

*வாவா மாமா*
*வழியே போ மாமா*
*வள்ளிக் கிழங்கு*
*வாங்கு மாமா*
*வெள்ளிப் பாத்திரத்திலே*
*பணம்போடு மாமா!*
*வெள்ளிக் கிண்ணம்*
*கிணற்றிலே தெரியுது*
*தள்ளிப் பார்த்தால்*
*மின்னித் தெரியும்!*

★

*மாமரத்துக்கும் பூமரத்துக்கும்*
*மயிலைக் கண்ணுட்டி—அந்த*
*மாமா என்கிற படவாவுக்கு*
*நீயா பொண்டாட்டி?*

★

*பூ பூ புளியம்பூ*
*பொன்னுங் கண்ணிக்குத் தாழம்பூ*
*காகா கருங்காக்காய்*
*கஞ்சி வடிக்கிற நெல்லிக்காய்*

ஒடி-ஒடி மொளகாய் அரைச்சு
ஒன்பது சட்டியில் கறியாக்கி
பார்க்க வந்தான் என்மாமன்
பரிசம் போட்டான் என்மாமன்
அடியடா பிடியடா
அத்தி மரத்திலே சாயடா!

★

மாமா வந்தாங்கோ
மடியிலே இருக்கிற காசு கொடுத்தாங்கோ
மாமியாருக்குப் பிள்ளை பிறந்தது
பிள்ளையைத் தூக்கிஊட்டிக்
கொஞ்சி வளர்த்தேன்.

★

புங்கம் இலை புளியம் இலை
எங்கிருக்குது?
பொன்னப்பன் தோட்டத்திலே
மிகுந்திருக்குது
அப்பா வரேன் அவ்விடத்தில்
பூச்சி இருக்குது
பூச்சிக்கு என்கையிலே
மருந்திருக்குது
கட்டாரிச் சேலை மேலே
கண் இருக்குது
மாமனுக்கும் எனக்கும் ஒரு
வம்பிருக்குது!

★

மாமாடா மாமா மாமரமாஞ் சோலை
நீவரும் வேளை நிலைக்கண்ணாடி
சந்தனப் பொட்டு சரிகைத் தலைப்பாகை
மல்வல்ல வாட்டு மகிழ்லாங் கோட்டு
சாயத்தோ வத்தியடா—மாமா
சரியில்லை புத்தியடா!

# கஞ்சியிலும் இன்பம்

இல்லற வாழ்க்கையில் வீட்டுக்குள்ளே அரசாட்சி புரிபவள் பெண். ஆடவன் வெளியிலே சென்று முயற்சி செய்து பொருள் ஈட்டி வருகிறான். அதை அளவாகச் செலவிட்டுக் குடும்ப நிர்வாகத்தை மிகவும் புத்திசாலித் தனத்தோடு செய்யக் கடமைப்பட்டவள் மனைவி. அவன் எவ்வளவு சம்பாதித்தாலும் வீட்டில் இருக்கிறவள் அடைவு இல்லாவிட்டால் சம்பாத்தியத்தால் இன்பம் இல்லை. நாலு பேரோடு ஐந்தாம் பேராகச் சாப்பிடவும், புடைவையும் நகையும் வாங்கிக் கொண்டு மினுக்கவுமே தெரிந்த பெண்மணிகள் மனைத் தலைவிகளாக இருக்கத் தகுதி அற்றவர்கள். வீட்டில் இருக்கும் பொம்மைகளோடு அவர்களையும் சேர்த்து எண்ணவேண்டியதுதான்.

குடும்பமாகிய அரசாட்சியை நடத்தத் தெரிந்த பெண்மணிதான் இல்லற வாழ்க்கையில் அமைதியையும் இன்பத்தையும் உண்டாக்குவாள். "ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்கியம்" என்ற பழமொழிக்கு என்ன என்னவோ அர்த்தம் சொல்வார்கள். சம்பாதிக்கிறவனுடைய வரும்படியை அறிந்து இல்லறத்தை நடத்தத் தெரிந்தவளால்தான் வாழ்க்கை இன்பம் உண்டாகிறதென்ற கருத்தையே அப் பழமொழி சொல்லுகிறது. குடும்ப பாரத்தை வகிக்கும் திறமை அவளிடம் இருப்பதனால்தான் அவளுக்கு "விறல் மந்திரி மதி" வேண்டுமென்று ஒரு பழைய பாட்டுச் சொல்லுகிறது. வீட்டு ராஜ்யத்திலே அவள்தான் பொக்கிஷ மந்திரி.

குடும்ப நிர்வாகத்தில் அவள் தன்னையும், குழந்தைகளையும், உறவினர்களையும் பாதுகாத்துக் கொள்வது ஒரு பங்காகவும், தன் நாயகனைப் பாதுகாப்பது ஒரு பங்காகவும் இருக்க வேண்டும். அவனுடைய உடல் நலத்தைக் கவனித்து அவனது வாய்க்கும் வயிற்றுக்கும் ஏற்றபடி உணவளித்துப் போற்றுவதை அவள் தன் முதற் கடமையாகக் கொள்ள வேண்டும்.

மிகச் சிறந்த இன்ப வாழ்வு என்பது, குறைவற்ற செல்வத்தை மனைவி மக்களோடு அநுபவிப்பது மாத்திரம் அல்ல. மனைவி இனிய உணவைக் காதலன் பசியையும் ருசியையும் அறிந்து உதவ, உண்டு வாழ்வது இன்ப வாழ்வு.

அதோ ஒரு சிறந்த பணக்காரர் இருக்கிறார்; கோடீசுவரர்; வீட்டில் பண்டங்களெல்லாம் நிரம்பியிருக்கின்றன. சமையற்காரன் சமைத்துப் போடுகிறான். என்ன பிரயோசனம்? அவர் உண்ணும்பொழுது உடன் இருந்து இனிய மொழிகளைப் பேசி உண்ணச் செய்யும் மனைவி ஒருத்தி இல்லையே!

அவள் இருந்தால் எல்லாம் இருப்பதுபோலத் தோன்றும். "வீட்டுக்காரி நல்ல யோக்கியதை உடையவளாக இருந்தால், அந்த வீட்டில் இல்லாத இன்பம் வேறு ஏது? அவள் சரியாக இல்லாவிட்டால் என்ன தான் இருந்தாலும் என்ன ஐயா பிரயோசனம்?" என்று வள்ளுவர் கேட்கிறார்.

> இல்லதென் இல்லவள் மாண்பானல்? உள்ளதென்
> இல்லவள் மாணாக் கடை?

ஆகவே காதலனுக்கு உணவூட்டும் காரியத்தில் மனைத் தலைவிக்குக் கவனம் இருக்க வேண்டும். "இதோ பாருங்கள்; என்ன திவ்யமாக இருக்கிறது! அமிர்தம்

போல இருக்கும்'' என்று சொல்லி மனைவிமார் சமைத்து உண்ணச் செய்கிறார்களே, அதுதான் செல்வ வாழ்க்கையாம். ''ஐய, மருந்து இவை, உண் என்று மாதர் அட்டு ஊட்டும் செல்வம்'' என்று ஒரு புலவர் அதை வருணிக்கிறார். ''அறுசுவை உண்டி அமர்ந்து இல்லாள் ஊட்ட, மறு சிகை நீக்கி உண்டோர்'' என்று ஐசுவரியத்தால் வரும் போகத்துக்கு அளவு கட்டுகிறார் ஒரு புலவர்.

செல்வர்களுடைய வாழ்க்கையிலேயே மாதர் சமையல் செய்யவேண்டும், புருஷனுக்குச் சாப்பாடு போட வேண்டும் என்று இருந்தால் ஏழைக்குச் சொல்ல வேண்டுமா? செல்வத்தால் வரும் பாத்திரங்களும் உணவுப் பண்டங்களும் ஏழைக்கு இல்லை. ஆனாலும் அவை இல்லாத குறையைப் போக்க அந்த ஏழைக்குக் கற்பகம்போல அருமைக் காதலி இருக்கிறாள். பல செல்வர்களுடைய வாழ்க்கை, ஒன்றாலும் குறைவில்லாமல் இருந்தாலும், அட்டு ஊட்டும் மாதர் அடைவாக இருப்பதில்லை. ஏழைத் தொழிலாளிக்கோ சோறு சமைக்க அரிசி இல்லாவிட்டாலும் கூழ்காய்ச்சக் குறுநொய் இருப்பதால் அதை அவன் மனைவி காய்ச்சி அன்போடு அவனுக்கு ஊற்றுகிறாள். அவன் அவளது முகமலர்ச்சியையும் இன்மொழியையும் துணையாகக் கொண்டு அந்தக் கூழையே இனிய அமுதமாக உட்கொள்கிறான். அவள் குறுநொய்யைக் கொண்டு கூழ் காய்ச்சினாலும் தன் அன்பையல்லவா அதில் சேர்த்து மணம் ஊட்டியிருக்கிறாள்?

வயல் வெளிகளில் காயும் வெயிலில் உழைக்கின்ற உழைப்பாளிகள் நடுப்பகலில் வரும் கஞ்சிக் கலயத்தைக் கண்டு எத்தனை உற்சாகம் அடைகிறார்கள்! கஞ்சி வருகிறதென்பது ஒன்றுதானா அவர்கள் இன்பத்துக்குக் காரணம்? அல்ல, அல்ல. கஞ்சி கொண்டுவரும் காதலியின் காட்சிதான் அந்த இன்பக் கொந்தளிப்புக்கு

மூலகாரணம். உழைப்பின் சிரமம் தோன்றுமல் செய்யும் மருந்து, புன்னகையுடன் வரும் அவள் பேச்சு!

கஞ்சி குடிக்கும் நேரமாயிற்று. அவள் வருவாளென்று பார்க்கிருன்; பரந்த திசைகளிலெல்லாம் அவன் கண்கள் நாடுகின்றன. அவனது வயிற்றுப் பசிக்கு மேலே இருக்கிறது கண்ணின் பசி. அசைந்து ஒசிந்து வரும் வேலாயி அவன் கண்ணில் படுகிருள். உள்ளம் உணர்ச்சி வசமாகிறது. மகிழ்ச்சி பாட்டாகிறது.

*வேலி ஓரம் வார புள்ளே—நம்ம*
*வேலாயிக் குட்டிதாண்டா!*
*காலைக் கஞ்சி யோடே வந்தால்—நம்ம*
*காதடைப்புத் தீருமடா!*

காலைக் கஞ்சியோடு அவள் வருகிரு ளென்றுலே காது அடைப்புத் தீர்ந்துவிடுமாம்! கஞ்சி வந்து குடிக்க வேண்டுமென்பதுகூட இல்லை. கண்ணின் பசி முதலில் தீர்ந்துவிடுகிற தல்லவா?

★

**வா**ழ்க்கையில் சிறிது தூரம் பிரயாணம் செய்த தம்பதிகள் அவர்கள். ஒருவருக்கொருவர் எதிரே பேசிப் பேச்சை வளர்ப்பதிலே தனி இன்பம் கண்டவர்கள். மூன்றுவது மனிதருக்கு, "என்ன, இவர்கள் ஏட்டிக்குப் போட்டி பேசிச் சச்சரவிடுகிருர்கள்? அவன் சொல்வதை இவள் உடனே கேட்டு நடப்பதில்லை; பதில் பேசுகிருளே!" என்று தான் தோன்றும். ஆனல் உண்மை வேறு. பேச்சை வளர்ப்பதில் இருவருக்கும் ஆனந்தம். அவன் கேட்பது, இவள் பேசாமடந்தை போலக் கொண்டு போய்க் கொடுப்பது என்று இருந்துவிட்டால் அது வெறும் யந்திர வாழ்க்கையாக அல்லவா போய் விடும்? எஜமானனுக்கு வேலைக்காரி பணிந்து ஒழுகும் முறை அல்லவா அது? இங்கே யார் எஜமானன்? யார்

வேலையாள்? ஒருவிதத்தில் அவன் எஜமானன்; மற்றொரு விதத்தில் அவள் எஜமானி. 'சரி நிகர் சமான'மாக வாழ்பவர்கள் அவர்கள். ஆகையால் பதில் சொல்லவும் மாட்டேனென்று மறுக்கவுங்கூட அவளுக்கு உரிமை உண்டு.

இந்தக் காதலனும் கஞ்சிதான் கேட்கிறான். வீட்டுப் புறக்கடையில் ஏற்றம் இறைக்கும் கணவன் அவன். வீட்டுக்குள்ளே கைவேலை செய்யும் மனைவி அவள். அவன் கஞ்சி கொண்டுவரும்படி ஏவுகிறான். அவள் பதில் சொல்கிறாள்.

*ஏத்தம் இறைக்கிறேன் இறைப்பு இறைக்கிறேன்*
*கொண்டாடி குட்டி கஞ்சி!*
*கொண்டாடி குட்டி கஞ்சி!*
*கிண்ணி வெளக்கறேன் சொம்பு வெளக்கறேன்*
*கொண்டாரக் கொஞ்சம் நேரம்!*
*கொண்டாரக் கொஞ்சம் நேரம்!*

*கூழு குடிக்கிற நேரம் ஆச்சு*
*கொண்டாடி குட்டி கஞ்சி!*
*கொண்டாடி குட்டி கஞ்சி!*
*குந்தக்கூட நேரம் இல்லே*
*கொட்டாரம் ஏண்டா அத்தான்!*
*கொஞ்சம் பொறுத்துக்கோ மச்சான்!*

உடனே ஓடிப்போய்க் கஞ்சி கொடுத்துவிட்டால் இவ்வளவு வாக்குவாதமும் அதிலே இருக்கும் ரசமும் உண்டாகுமா? வாழ்க்கையைச் சுவை பெறும்படியாக வைத்து வாழத் தெரிந்தவர்கள் அந்த இன்பக் காதலர்கள் என்று சொல்வதில் என்ன பிழை? அவர்கள் குடிக்கிறது கஞ்சிதான்; ஆனாலும் அவர்கள் உள்ளத்திலே குமிழியிட்டுக் கொப்புளிப்பது மாளிகையில் பெரு விருந்து உண்பவரிடத்திலும் காணாத இன்பம்!

# அத்தான் விஜயம்

அத்தை மகனை அத்தான் என்று வழங்குவது தமிழ் நாட்டு வழக்கு. அத்தை மகனை மணம் செய்து கொள்வதைச் சில சாதியார் உரிமையாகக் கொண்டாடுவர். பெரும்பாலும் அத்தை மகனைக் கணவனாகப் பெறும் வழக்கத்திலே ஊறிய சமுதாயத்தில் கணவனை அத்தான் என்று அழைக்கும் மரபு உண்டாயிற்று. அவன் அத்தை மகனாக இல்லாவிட்டாலும் அத்தான் என்று வழங்கும் சம்பிரதாயம் மாறவில்லை.

தமக்கைக்கு அத்தான் முறையானால் தங்கைக்கும் அத்தான் முறைதானே? ஆதலால் அக்காள் புருஷனை அத்தான் என்று வழங்கும் முறையும் தொடர்ந்து வந்தது. பிராமணர்கள் அக்காள் புருஷனை அத்திம்பேர் என்று வழங்குகிறார்கள்; மற்றச் சாதியினர் அத்தானென்று அழைப்பதே பெரும்பான்மையான வழக்கம்.

தமக்கை கணவனைக் கண்டால் தங்கைமார்களுக்கு அளவில்லாத ஆனந்தம். அவனுக்கும் அவர்களைப் பொம்மைகளாக நினைத்து விளையாடுவது இன்பத்தை அளிக்கும். அத்தானைப் பரிகாசம் செய்து கிண்டல் பண்ணுவது, தமிழ் நாட்டுக் குடும்பங்களில் ஹாஸ்ய உணர்ச்சியிருப்பதற்கு அடையாளமாக நிலவுகிறது.

★

அத்தான் இன்னும் குடித்தனம் வைக்கவில்லை. அக்காள் பிறந்தகத்திலேதான் இருக்கிறாள். அடிக்கடி மாமனார் வீட்டுக்கு அவன் விஜயம் செய்கிறான். ஹாஸ்ய

சம்பாஷணைகள், காதல் நாடகம் எல்லாம் நடக்கின்றன. அத்தான் விஜயம் என்றுலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான குதூகலம்.

அதோ அத்தான் விஜயம் செய்கிறுன்!

அவன் வரும்போது புளியந்தோப்பு வழியாக வந்திருக்கவேண்டும். அவன் தலையில் இரண்டு புளியம் பூ இதழ்கள் மின்னுகின்றன. அதை இந்தச் சிறு குட்டி, அவன் மைத்துனி, பார்த்துவிட்டாள். "ஆஹா! உலகத்துக்கு இது புளியம் பூ! அத்தான் கொண்டையில் மின்னும்போது அதற்கு ஒரு பொலிவு ஏற்பட்டுவிட்டதே! என்ன அழகாக விளங்குகிறது! அத்தான் கொண்டைக்கு ஏற்ற தாழம்பூவாக அல்லவோ இருக்கிறது!" என்று தன் பரிகாசத்தை ஆரம்பித்துவிட்டாள்.

பூ பூ புளியம்பூ
பொன்அத்தான் கொண்டைக்குத் தாழம்பூ

அத்தைமகன் வாசலிலே
அதோ நிற்கிறுன் பாருங்கள்.

மீசையின் முறுக்கைப் பார்
மேலே சரிகைக் குட்டையைப் பார்

சொக்காயின் சொகுசைப் பார்
தோவத்தியின் மினுக்கைப் பார்

கையில் குடையின் ஒழுங்கைப்பார்
கடியாரத்தின் கொலுசைப்பார்

இங்கே வந்த காரியம்
என்னவென்று கேளுங்கள்.

பூ! பூ! புளியம் பூ!

இந்தப் பரிகாசத்தை அவன் எதிர்பார்த்தே வந்தவன்; வீட்டிற்குள்ளே நுழைகிறுன். அவனுடைய ஆடை

யலங்கார்ரத்தை வருணித்த பெண், அவனை நேரே பார்த்து அவன் திருவுருவ வருணனை செய்கிறாள்.

*அத்தானே அத்தானே வாருங்கள்*
*அமரிக்கையாய் உட்காருங்கள்*
*ஆறு பணம் தாருங்கள்*
*அக்காள் அழகைப் பாருங்கள்*
*உங்கள் கண்ணோ ஆனைக்கண்*
*உசந்த மூக்கோ கிளிமூக்கு*
*பேசும் நாக்கோ பிண்ணாக்கு*
*பெருத்த வாயோ ஒருகால்வாய்*
*நல்ல வயிறோ வண்ணான்சால்*
*நடக்கும் காலோ ஏணிக்கால்*
*இந்த அழகுக்கு ஒருவாய்ஏன்?*
*இடத்தை விட்டு எழுந்துபோ!*

அத்தான், வீட்டுக்கு மாப்பிள்ளை; ஆகவே அவன் வந்தால் பெரிய விருந்து நடைபெறும். அக்காளும் அம்மாவும் விருந்து சமைப்பதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். தங்கைக்கு நாக்கில் நீர் ஊறுகிறது. "இன்று என்ன சமையல்?" என்று அக்காளை முன்பே கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறாள். வேறு கவனமின்றிச் சமையல் வேலையில் ஈடுபட்டிருக்கும் அக்காளுக்கு, இவளுக்குப் பதில் சொல்வதற்கா நேரம் இருக்கிறது? 'வள்' என்று விழுகிறாள்.

*அக்காளே அக்காளே*
*அத்தானுக்கு என்ன கறி?*
*ஊசற் பலாக்கொட்டை*
*ஒய்யார மாங்கொட்டை*
*காட்டு மரவட்டை*
*போட்டுக் குழம்பிட்டேன்!*

அத்தானுக்கு விருந்து பலமாக நடைபெறுகிறது. தன் மைத்துனியுடன் ஒய்யாரமாகப் பேசுகிறான். அவன் வந்து சென்றது ஒரு பெரிய விழாவைப்போல இருக்கிறது. அயல்வீட்டுக்காரர்களுக்கு அந்த வீட்டில் மாப்பிள்ளையை எப்படி வரவேற்றார்கள், என்ன விருந்து செய்தார்கள். அவன் என்ன பேசினான். ஏதாவது கோபம் உண்டா என்றெல்லாம் தெரிந்துகொள்ள ஆவல் உண்டாகிறது.

அந்தச் சிறுபெண்தான் இருக்கிறாளே, அவர்களுக்குச் செய்தியைத் தெரிவிக்கும் கருவியாக.

"உங்கள் வீட்டில் இன்று என்ன சமையல்?"

அவள் பதில் சொல்கிறாள் :

*கத்திரிக்காய்ப் பால்கறி*
*கடலைப்பருப்புக் கூட்டுக்கறி*
*மணமான மதராஸ்ரஸம்*
*மகாராஜா மயங்கும் பாயஸம்*
*சுதேசி சாம்பார்*
*தஞ்சாவூர்த் துவையல்*
*தங்கமான பொரியல்*
*பொம்பாய் மாப்பிள்ளை சாப்பிடுகிறார்*
*அவ்வளவு தானம்மா*
*எங்கள் வீட்டில்!*

"அத்தான் வந்தானே? என்ன சொன்னான்?" என்று மற்றொரு கிழவி கேட்கிறாள்; விடை வருகிறது:

*அத்தான் வந்தாங்க*
*ஆத்தில் இருக்கிற பாகற்காயை*
*அறுக்கச் சொன்னாங்க*
*பின்னே கொஞ்சம் நெய்யை ஊற்றி*
*வறுக்கச் சொன்னாங்க*

சின்னக் கிண்ணியில் சோறு போட்டுத்
தின்னச் சொன்னுங்க
பாலக் காட்டுப் பாயைப் போட்டுப்
படுக்கச் சொன்னுங்க.

"உங்கள் வீட்டிலே ஏதோ சச்சரவுபோலக் கேட்டதே! என்ன சமாசாரம்? அத்தான் ஏதாவது சண்டை பிடித்தாரா?"

அத்தான் வந்தானே
என்ன சொன்னுனே?
ஆத்தில் இருக்கிற பாகற்காயை
அறுக்கச் சொன்னுனே
நெய்யை ஊற்றிப் பொரிச்சு வைச்சேன்
வாணும் என்றுனே
இலையைப் போட்டுச் சோறு போட்டால்
திப்பி என்றுனே
அடையைச் சுட்டுக் கையில் கொடுத்தால்
வறட்டி என்றுனே
வெண்ணெய் காய்ச்சிக் கிண்ணியில் ஊற்றினுல்
தண்ணி என்றுனே
பிள்ளையைப் பெற்றுக் கையில் கொடுத்தால்
பொம்மை என்றுனே!

கிழவிகளுக்கு, "அப்படியா!" என்ற ஆச்சரியத்துக்குள்ளே ஒருவகையான திருப்தி உள்ளத்துக்குள் உதயமாகிறது. அத்தான் விஜயத்தால் அவர்களுக்கும் ஒரு வகையில் இன்பம்!

# நகையும் மலரும்

உலகம் முழுவதுமே பெண்களை அழகுப் பொருளாக வைத்துப் பாராட்கிறது. "மலரினில் நீல வானில் மாதரார் முகத்தில் எல்லாம், இலகிய அழகை ஈசன் இயற்றினன்" என்று பாரதியார் சொல்லுகிருர். இயற்கையிலேயே அழகுக்கு இருப்பிடமாக இருக்கும் மகளிரை ஆடையாலும் அணியாலும் பின்னும் அலங்கரித்து அழகு பார்க்கிறது உலகம். இன்று புதிய புதிய நாகரிக மோஸ்தர் உலகத்தில் எழும்புகின்றதென்று சொல்வது பெரும்பாலும் பெண்ணுலகத்தின் அலங்கார முன்னேற்றத்தைக் கண்டுதான்.

ஆடவர்களும் ஆடையும் அணியும் புனைந்துகொண்டாலும் மகளிருக்கே அவை உரிய பொருள்களைப்போல விளங்குகின்றன. தமிழ் நாட்டில் ஆபரணம் பூணுவது பெண்களுக்கு உடன்பிறந்த உரிமை; மலர் சூடுவது அவர்கள் உல்லாசத்தை மிகுதிப்படுத்தும் காரியம். பெண்களைத் தமிழ்க் கவிகள் பலபல விதமாக அழகிய வருணனைப் பெயர்களை இட்டு வழங்குவார்கள். சிறிய இடையை உடையவள், கரிய கூந்தலை உடையவள் என்பனபோல வருணிப்பார்கள். நல்ல நகைகளைப் பொறுக்கி அணிந்து கொள்பவள் என்று பெண்களைக் கூறுவது உண்டு.

தெரியிழை, ஆயிழை என்ற தொடர்கள் பெண்களைக் குறிப்பன. ஆராய்ந்து எடுத்த ஆபரணங்களை அணிபவள் என்பது அந்தத் தொடர்களின் பொருள். இக்காலத்திலும் மாதர்கள் புடைவைக் கடைக்கோ நகைக் கடைக்கோ போனல், போனும், எதையோ ஒன்றை

எடுத்தோம், வாங்கி வந்தோம் என்னும்படி வியாபாரம் செய்கிறார்களா? இல்லை. பத்து ரூபாயில் ஒரு புடைவை வாங்கவேண்டி யிருக்கும். அந்தப் புடைவையை மிக அருகில் உள்ள கடையிலே வாங்கிவிடலாம். அப்படிச் செய்ய அந்த ஆயிழைகளுக்கு விருப்பம் இருப்பதில்லை. கால் கடுக்கப் பல கடைகளில் ஏறி இறங்கி அங்குள்ள ஒவ்வோர் அலமாரியையும் காலிபண்ணச் செய்து ஒருவிதமாக ஊரில் உள்ள புடைவைகளை யெல்லாம் கண் காணித்த பிறகே ஒரு புடைவையை எடுத்துக்கொண்டு வருவார்கள். நகைக் கடை, பாத்திரக் கடை ஏதானாலும் 'தேர்ந்தெடுக்கும்' வழக்கத்தை அவர்கள் விடுவதே இல்லை.

எந்தக் காலத்திலும் இந்த வழக்கம் பெண்ணுலகத்துக்கு உரியது போலும்! அதனால்தான் பழங்கால முதல் பெண்களைத் தெரியிழை என்றும், ஆயிழை என்றும் தமிழ்ப் புலவர்கள் சொல்லி வருகிறார்கள். நகைகளைத் தேர்ந்தெடுத்து அணிவதில் மங்கையருக்கு அளவற்ற ஆசை. தலைமுதல் பாதம் வரையில் தமிழ் மகளிர் அணிந்த நகைகளுக்குக் கணக்கே இல்லை. இப்படி எல்லா நகைகளையும் அணிந்துகொண்ட மங்கையைப் பார்த்துப் புலவர்கள், "முற்றிழை" என்று வருணித்தார்கள். உடம்பு முழுதும் ஆபரணங்கள் நிரம்பியிருப்பதனால், இவளுக்கு இன்ன நகை இல்லையென்ற குறையின்றி எல்லாம் பரிபூரணமாக அமைந்திருப்பதனால், அவளை 'முற்றிழை' என்று சொன்னார்கள். "அணியிலாக் கவிதை, பணியிலா வனிதை" என்று ஒரு பழமொழி தமிழ் நாட்டில் உலவுகிறது. பெண்டிருக்கு ஆபரணம் அவசியம் என்ற கருத்தை அது புலப்படுத்துகிறதல்லவா?

பழங்காலத்தில் ஒரு காதலன் தன் காதலியை மணப்பதற்காகப் பரிசம் போடுவான். அந்தப் பரிசத்தைத்தன்

காதலியின் ஆபரணத்துக்காக அவன் தருவான். இந்த வழக்கம் இன்னும் சில வகுப்புக்களில் இருக்கிறது. முதல் முதலாகக் காதலியைச் சந்திக்கும் காதலன் அவளுக்கு அளிப்பதற்குக் கையுறையாக முத்து மாலையையோ வேறு ஆபரணத்தையோ கொண்டு வருவதும் உண்டு.

ஆபரணத்துக்குப் பொன் வேண்டும், வெள்ளி வேண்டும். அதனிலும் சுலபமான அலங்காரப் பொருளைக் கடவுள் அளித்திருக்கிறார். அழகும் மணமும் உடைய மலர்களை மிக எளிதில் யாவரும் பெறலாம். மடமங்கையர் அன்றன்று மலர் சூடி முகங் கழுவிப் பொட்டிட்டு முகவிலாசம் பொங்க நிற்பதில் ஆனந்தம் கொள்கிறார்கள். நகையினால் உள்ளம் மயங்கும் நங்கைமார், மலரைக் கண்டால் ஆசையோடு பெற்றுச் சூடிக் கொள்கிறார்கள். தமிழ் நாட்டு மகளிருக்கு மணமுள்ள மலரிடத்தில் உண்டாகும் ஆவலுக்கு எல்லை இல்லை.

மகளிர் உள்ளம் மலரில் ஈடுபடுவதை ஆடவன் நன்றாக உணர்ந்திருக்கிறான். காதலியைச் சந்திக்கும் காதலன் கைந்நிறைய மலரைப் பிடித்து வருகிறான். அது கண்டு அவள் உள்ளம் மலர்ந்து முகம் மலர்கிறாள். பழங் காலத் தமிழர் வாழ்க்கையில் கல்யாணம் செய்துகொள்வதற்கு முன்பே மங்கை ஒருத்திக்கும் வீரன் ஒருவனுக்கும் காதல் தொடர்பு உண்டாவது உண்டு. அதைக் களவுக் காதல் என்பார்கள். அவர்கள் மறைவாகக் காதல் புரிந்த பின் மணம் செய்துகொள்ள எண்ணுவார்கள். அந்தப் பெண்ணுக்கு ஏற்ற நாயகன் இன்னான் என்பதை அவளுடைய தோழி சுற்றத்தாருக்கு வெளியிடுவாள். அவ்விருவரும் எவ்வாறு சந்தித்தார்கள் என்பதற்குத் தோழி பல காரணங்களைச் சொல்வது உண்டு. "இவள் பொய்கைக் கரையிலே நீராடிவிட்டு நின்றாள். அப்போது கட்டிளங் காளை ஒருவன் தன் கரத்தில் அழகும் மணமும்

உள்ள மலர் ஒன்றை ஏந்தி வந்து, 'பெண்ணே, இது உன் அழகுக்கு ஏற்றது' என்று அளித்தான். இவளும் அதை வாங்கி அணிந்தாள். அந்த மலர் காரணமாக இருவர் இருதய மலர்களும் இணைந்தன'' என்று சொல்வது ஒரு முறை. மலர் காரணமாக நேர்ந்த தொடர்பாகிய இதை, ''பூத்தரு புணர்ச்சி'' என்று இலக்கணக்காரர்கள் சொல்வார்கள். மலர், காதல் உள்ளங்களை ஒன்றுபடுத்தும் அரிய பொருளாகிறது. மாதர், மலருக்கு உள்ளத்தைக் கொள்ளை கொடுத்தனர் என்ற செய்தியை இந்த வழக்கம் தெரிவிக்கிறது.

★

புத்தகத்தில் மட்டும் அல்ல; உலகத்திலும் நகையாலும் மலராலும் மங்கையரை மயக்கும் ஆடவர் இருக்கிறார்கள். ஆகையால், உலக நிகழ்ச்சிகளை உள்ளபடி தெளிந்து அதனால் உண்டாகும் உணர்ச்சி வசப்பட்ட நாடோடிப் பாவலன், மலரும் நகையும் மங்கையரை மயக்கும் பொருள்கள் என்பதைப் பலவிதமாகச் சொல்லுகிறான். நாடோடி இலக்கியத்தில் வரும் காதலர், காதலிமாரை அணுகி ரோஜாப்பூவையும் மல்லிகைப் பூவையும் காட்டிக் காதல் புரிகிறார்கள்.

*ரயில்மேலே போற பெண்ணே*
*ரோஜாப்பூ வாங்கித் தாரேன்*
*ரயிலை விட்டுக் கீழிறங்கி வா வா வா!*
*மலைமேலே போற பெண்ணே*
*மல்லிகைப் பூ வாங்கித் தாரேன்*
*மலையை விட்டுக் கீழிறங்கி வா வா வா!*

தன் காதலியை வண்டியில் ஏற்றிக் கொண்டையிலே ரோஜாப்பூவைச் சூட்டி அண்டையிலே தான் அமர்ந்து கொள்கிறான் ஒரு காதலன்.

ஏறம்மா வண்டியிலே
ரோஜாப்பூக் கொண்டையிலே
நான் வாறேன் அண்டையிலே!

ஊரை விட்டு வீட்டை விட்டு இளங் காதலியைக் களவாக அழைத்துச் செல்கிறான் ஒரு காதலன். பழைய காலத்தில் இதை இலக்கண முறையில் "உடன் போக்கு" என்று சொல்வார்கள். பலகாலம் பழகிய வீட்டை விட்டுப் பிரிவதில் காதலிக்குத் தைரியம் இருக்குமோ, இராதோ என்று அவன் யோசிக்கிறான். அவளுக்கு உற்சாகம் ஊட்டும் செய்தி என்ன என்று எண்ணிப் பார்க்கிறான். ஆபரணமும் மாமலரும் இருந்தால் பேதைப் பெண்டிர் உலகையே மறந்துவிடுவார்கள் என்பதை அறிந்த அவன், "அடி பெண்ணே, இந்த ஊரை விட்டுப் போகிறோமே, நமக்கு வேண்டிய பொருள் கிடைக்குமா என்று மயங்காதே. உலகம் முழுவதும் நாம் உல்லாசமாகப் பிரயாணம் செய்யலாம்; போன இடங்களில் வளையும் மலரும் நிறைந்திருக்கும். அவற்றை வாங்கி அணியலாம்" என்கிறான். உலக முழுவதும் காதல் அரங்கமாகிவிடுகிறது; நகைப்பெட்டி யாகிறது; மலர்வனமாக இருக்கிறது.

வடவூரு போகலாம்
வெள்ளி வளையல் வாங்கலாம்
கைகள் மின்னப் போடலாம்
கைவீசி நடக்கலாம்.
மங்களூரு போகலாம்
மல்லிகைப் பூ வாங்கலாம்
மாலை யாகக் கட்டலாம்
மகிழ்ந்து தலையிற் சூட்டலாம்.

*தஞ்சா வூரு போகலாம்*
*தாழம்பூ வாங்கலாம்*
*தலையினிலே சூடலாம்*
*தடவித் தடவிப் பார்க்கலாம்.*

தன் காதலியை ஓரிடத்திற்கு வரச் சொல்கிறான் மற்றொரு காதலன். அவளுக்கு வேண்டிய கண்ணாடியையும் மல்லிகை மலரையும் வாங்கலாமென்று அன்பொழுகச் சொல்கிறான்.

*கன்னங்கட வோரத்திலே*
*வந்து நில்லடி*
*கண்ணுக் கேற்ற கண்ணாடியை*
*விலையைத் தீரடி.*
*மார்க்கட்டு ஓரத்திலே*
*வந்து நில்லடி*
*மனசுக் கேற்ற மல்லிகைப்பூ*
*விலையைத் தீரடி.*

ராஜபோகத்திலே வாழும் பெருமாட்டி ஒருத்தியின் செல்வச் சிறப்பை நாடோடிக் கவிஞன் வருணிக்கிறான். மாளிகையும் விருந்தும் வாகனமும் செல்வ வாழ்க்கையின் அடையாளமாக அவன் சொல்லவில்லை. அவள் பணிகளும் மலர்களும் நிரம்பிய வாழ்க்கையை உடையவளாம்.

'நேரமொரு பூச்சூட்டி நித்தமொரு பணி அணிந்து' என்று சொல்கிறான். பூவும் நகையும் அவளைச் செல்வியாக்குகின்றன.

# வீரத்தின் தோல்வி

கட்டழகும் வீரமும் உடைய காளை அவன்; எத்தனையோ காரியங்களைச் சாதிக்க வல்லவன். மலையைப் புரட்ட வேணுமா? அவனைப் பீமனென்றுதான் சொல்ல வேணும்; அப்படியே தூக்கி நிறுத்துவான். காலம் அறிந்து இடம் அறிந்து காரியங்களைச் செய்யும் சக்தி படைத்தவன் அந்த இளவீரன்.

வீட்டுக்கு மாங்காய் வேண்டும் என்று அம்மா சொல்ல வேண்டியதுதான் தாமதம்; அடுத்த கணத்தில் ஒருவண்டி மாங்காய், மாந்தோப்புக்குப் போய்க்கொண்டு வந்துவிடுவான். அப்பா, பூசைக்குப் பூ வேண்டும் என்றால் குடலை குடலையாகக் கொண்டுவந்து தள்ளு வான். எங்கேதான் அவனுக்குப் பூக் கிடைக்குமோ! 'இன்று புளியங்காய் வேணும்; தேங்காய் வேணும்; நார்த்தங்காய் வேணும்' என்று அவன் காதிலே போட்டு விட்டால் இந்த உலகத்திலுள்ள காய் மரங்களையெல் லாம் ஒருகை பார்த்துவிட்டு வந்துவிடுவான்.

அம்பும் வில்லும் எடுத்துக்கொண்டு வேட்டைக்குப் போவான். அவனுடைய வேட்டையில் அகப்படாத மிருகம் இல்லை. கறுகறுவென்று காரழகனாக நிற்கும் அவனைப் பழங்காலத்துக் கண்ணப்பனாகச் சொல்லலாமா? சாட்சாத் காமனே காரழகன்தானே? அவனுக்கு இவன் இளைத்தவனா? அவன் கைக் கரும்புவில்லுக்கு இவன் கைவில் மகிமை குறைந்ததா? இவனுடைய குஞ்சி யழகும், வில்லழகும், மேனியழகும் கண்டால் மடமங்கையர் உள்ளம் என்ன பாடு படாது? மான் வேட்டை ஆடு

வதில் மாத்திரமல்ல, சந்தர்ப்பம் வந்தால் மான்போன்ற மடமங்கையரையும் கண்ணி வைத்துப் பிடிப்பவன் அவன். வீரமும், அழகும், இளமையும் இருக்கும்போது பெண்மை அவன் காலில் விழுவதற்கு என்ன தடை?

இது பழைய கதை. இப்போது அவன்தான் அவளை மயக்கினனே, அவளே அவனை மயக்கினளோ தெரியாது. காய்க்கும் பூவுக்கும் போன இடத்திலே கண்டு மயங்கினனே? அல்லது வேட்டைக்குப் போன இடத்திலே விளையாடினனே? இப்போது அவனுடைய துடுக்கும் மிடுக்கும் மறைந்து கிடக்கின்றன.

கோவை என்ற ஒருவகைப் பிரபந்தத்திலே ஒரு காட்சி வருகிறது. மலர் குலுங்கிக் கனி மிகுந்து நிழலடர்ந்த பூஞ்சோலையிலே, ஒரு மடமங்கையைப் பெருவீரனகிய மன்னன் ஒருவன் கண்டான். இருவர் கண்ணிணைகளும் ஒத்தன; காதல் உண்டாயிற்று. இருவரும் அளவளாவினர்கள். அவ்வீரன் மீட்டும் தன் ஊருக்கு வந்தான். அவனுடைய அருமைத் தோழன் அவனைப் பார்க்கும்போது அவனிடம் ஏதோ வேறுபாட்டைக் கண்டான். "இதென்ன? சோர்ந்து நிற்கிருயே! பலமெல்லாம் இழந்தவன்போல இருக்கிருயே! பெருவீரனகிய உனக்கு இந்த நிலை வந்ததற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான். மன்னன், "ஒரு மானின் காதற் கண்ணியிலே பட்டேன்" என்று குறிப்பாகச் சொன்னன். "இவ்வளவும் வீரமும், அறிவும் நிறைந்த நீயே இப்படியானல் உலகம் என்னவது?" என்று தோழன் சொன்னன். காதலின் பேராற்றலை அவன் தெரிந்துகொள்ள வில்லை. அப்பால் மன்னனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட மானியலாளைக் கண்டபிறகே, தன் தோழன், அவளைக் கண்டு அளவளாவி அங்கேயே தங்கி விடாமல் தன்னை நினைந்து வந்ததே பெரிதென்று

நினைந்தான். அந்த மங்கையின் பேரழகு அப்படி இருந்தது!

இங்கே, காரழகன் அந்த மன்னனைப் போல இருக்கிறான். மாங்கனி கொண்டு வருகிறேனென்று போனால், வெறுங் கையோடு வருகிறான். "மரத்திலே ஒன்றும் இல்லை" என்கிறான். பூவெடுக்கப் போனால் என்ன காரணமோ, "மரத்தில் பூவே இல்லை" என்று சொல்லிக்கொண்டு வருகிறான்.

இந்த மாறுபாட்டுக்குக் காரணம் என்ன? அவனுடைய அந்தரங்கத் தோழன் கேட்கிறான். காரழகன் விடை சொல்கிறான். "முன்பெல்லாம் மாமரமும் பூமரமும் விளைந்திருந்தன. இப்போது அங்கே ஒரு மங்கை இருந்து தன் கனி மொழியால்; மலர் போன்ற மென்மையால் என்னைத் தன் வசமாக்கிக் கொள்கிறாள். போன காரியத்தை நான் மறந்தே போகிறேன். மாவில் கனியிருந்தும் எனக்கு இல்லாதது போல ஆகிவிடுகிறது. பூமரத்தில் பூவிருந்தும் பூ மாறிப்போன மாதிரி ஆகிறது." இந்தக் கருத்தைக் குறிப்பாகச் சொல்கிறான்.

*மாமரத்தின் கீழே—ஒரு*
*மங்கைஉரை சொன்னாள்;*
*மாமரங்கள் எல்லாம்*
*மாமாறிப் போச்சு!*
*பூமரத்தின் கீழே - ஒரு*
*பொண்ணுஉரை சொன்னாள்;*
*பூமரங்கள் எல்லாம்*
*பூமாறிப் போச்சு!*
*காய்மரத்தின் கீழே - ஒரு*
*கன்னிஉரை சொன்னாள்;*
*காய்மரங்கள் எல்லாம்*
*காய்மாறிப் போச்சு!*

"அப்படியானால் நீ வேட்டைக்குப் போனாயே; ஏன் வெறுங் கையோடு வந்தாய்?" என்று கேட்கிறான் தோழன்.

"போகும்போது கொண்டு போன வில்லும், அம்பும் எங்கேயோ தொலைந்து விட்டன. நான் என்ன செய்வேன்!" என்று விடை வருகிறது. மேலும் அவன் கேட்கக் காரழகன் விடை சொல்லுகிறான்.

*அம்பழகா தம்பி - உன்*
*அம்பும் வில்லும் எங்கே?*
*அம்பாளுடன் கூடி - என்*
*அம்பும் வில்லுந் தோற்றேன்.*
*காரழகா தம்பி - உன்*
*கரும்பு வில்லு எங்கே?*
*கன்னியிடம் கூடி - அந்தக்*
*கரும்பு வில்லுத் தோற்றேன்.*
*சிண்டழகா தம்பி - உன்*
*சிண்டு வில்லு எங்கே?*
*சிண்டு வில்லு அண்ணா,*
*சீதையிடம் கூடி*
*சீதை மடிமேலே - நான்*
*கூடிவிளை யாடி*
*கூடிவிளை யாடி - என்*
*சிண்டுவில்லுத் தோற்றேன்.*

உண்மையில் அவன் தோற்றானா? காதலியின் உள்ளத்தை வென்று இன்ப அரசாட்சியை நடத்தப் புகுந்த அவன் செயல் வீரத்துக்குத் தோல்வியானால், அது காதலுக்கு வெற்றியல்லவா?

[இந்தக் காட்சியைச் சித்திரிக்கும் அடிகள் ஓர் ஏற்றப் பாட்டின் பகுதி.]

# குடும்ப விரிவு

குடும்பத்தை விட்டு விட்டு விரக்தியோடு வெளிப்பட்ட ஒரு சந்நியாசி ஆடைகூட இல்லாமல் வெறும் கோவணாண்டியாகத் திரிந்துகொண்டிருந்தார். ஒற்றைக் கோவணந்தான் அவர் சொத்து; அவருக்குக் கைகளே பிச்சைப் பாத்திரம்; வானமே கூரை. இந்த உலகம் முழுவதும் அவருக்குச் சொந்தம்.

இவ்வாறு வாழ்க்கை நடத்திய அவருக்குப் போதாத காலம் வந்தது. யாரை விட்டது சனியன்? யாரோ ஒரு பக்தர் அந்தச் சாமியார் ஒற்றைக் கோவணத்தோடு திரிவதைக் கண்டு மனம் உருகி, "உலகம் எல்லாம் பட்டும் துகிலும் உடுத்துப் பகட்டும்போது இந்த மகானுக்கு இரண்டாங் கோவணங்கூட இல்லையே!" என்று அங்கலாய்த்தார். பிறகு சுத்தமான கோவணம் இரண்டைத் தனியே செய்யச் செய்து சந்நியாசியைப் பணிந்து கெஞ்சி அவரிடம் சமர்ப்பித்தார். அன்புடையவர்களது உள்ளத்தைப் புண்படுத்தக் கூடாது என்ற எண்ணத்தால் அந்தப் பரதேசி இரண்டையும் ஏற்றுக் கொண்டார்.

ஒரு நாள் ஒரு கோவணத்தைக் கட்டிக்கொள்வது, மற்றொன்றைக் கசக்கிக் காயப் போடுவது, அடுத்த நாள் அதைக் கட்டிக்கொள்வது என்று இப்படியாக அந்த இரண்டு கோவணங்களையும் சந்நியாசி உபயோகப்படுத்திக் கொண்டார். நாளாக ஆக, கோவணத்தைச் சுத்தமாகக் கசக்கிக் காயப் போட்டுப் பத்திரமாக எடுத்து வைத்து உபயோகிப்பதில் அவர் கவனம் செல்லத்

தொடங்கியது. அவருக்கு வேறு ஒரு சொத்தும் இல்லா விட்டாலும், பணக்காரன் தன் செல்வத்தை எப்படி மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவாறே, அப்படி அந்தக் கோவணங்களைப் பாதுகாத்து வந்தார்.

ஒரு நாள் உலர்த்தியிருந்த கோவணத்தை எலி கடித்துவிட்டது. அதைப் பார்த்தபோது சந்நியாசி வருத்தமடைந்தார். 'இவ்வளவு ஜாக்கிரதையாகக் காப் பாற்றினதை எலி கடித்து நாசமாக்கி விட்டதே! என்ன செய்வது!' என்ற துக்கம் அவர் உள்ளத்திலே குமுறியது. அதோடு, மாற்றி மாற்றி உலர்ந்த கோவணத்தைக் கட்டிக்கொண்டு பழக்கமாகி விட்டபடியால், இப்போது இரண்டாவது கோவணம் இல்லாமல் வாழ்வதே முடியாது என்று தோன்றிற்று. 'இதைப் போய் நாம் ஒருவரைக் கேட்பதா? என்ற எண்ணம் முதலில் தோன் றினாலும், 'சந்நியாசிக்குக் கௌரவம் என்ன வேண்டி யிருக்கிறது? தினந்தோறும் உணவைக் கேட்டுப் பிக்ஷை எடுத்துத்தானே பெறுகிறோம்? இப்போது கோவணம் கேட்பதனால் நாம் ஒன்றும் புதிய காரியம் செய்யப் போகிறதில்லையே!' என்ற சமாதானம் பிறகு தோன்றித் தைரியத்தை உண்டாக்கியது. பழைய அன்பரைக் கேட்டார். அவர் ஒன்றுக்கு இரண்டாகத் தந்தார்.

அந்த இரண்டையும் மிக்க சந்தோஷத்தோடு பெற் றுக்கொண்ட சாமியார், "இனிமேல் இந்த இரண்டும் கெட்டுப்போக விடக்கூடாது" என்று நினைத்தார். எலி கடித்துவிட்டால் என்ன செய்வது? கோவணங்களைப் பெற்றதைக் காட்டிலும் அவற்றைக் காப்பாற்றுவது பெரிய காரியம் ஆகிவிட்டது. எலியின் உபத்திரவத்தைப் போக்க என்ன பரிகாரம் உண்டு என்ற ஆராய்ச்சியிலே புகுந்தார். பூனை ஒன்றை வளர்த்தால் எலி வராது என்ற நினைவு வரவே பூனை வாங்கி வளர்க்கலானார். பூனைக்கு

வேண்டிய போஷணை வேண்டுமே! தம்மை எலிப் பகைவனிடமிருந்து காப்பாற்ற வந்த பூனையை நன்ருக வளர்க்காவிட்டால், எலி கொழுத்துப்போய்க் கோவணத்தைக் கெடுத்து வாழ்க்கையையே நாசமாக்கிவிடுமே! பூனைக்குத் தினந்தோறும் பால் யாசகம் செய்து கொடுத்து வந்தார். அடுத்தபடியாக ஒரு மாட்டையே வாங்கிக் கட்டினுர். அதைப் பார்த்துக்கொள்ள ஒரு பையன், அவனுக்குச் சோறு போட ஒரு பெண்—இப்படி அவர் குடும்பம் வளர்ந்தது. கடைசியில் அந்தப் பெண்ணையே மணந்துகொண்டு சந்நியாசி ஒரு பெரிய குடும்பி ஆகிவிட்டார்.

கோவணத்தைக் காப்பாற்ற ஆரம்பித்துக் குடும்பத்தைச் சம்பாதித்துக்கொண்ட சந்நியாசியின் கதை, தமிழ் நாட்டு நாடோடிக் கதைகளில் ஒன்று. ஒரு பொருளில் பற்று வைத்துவிட்டால் அது வளர வளரப் பல பொருள்களின் சம்பந்தமும், அவற்ருல் கவலைகளும் அதிகப்பட்டுக் கொண்டே வரும். இந்தத் தத்துவத்தை நினைத்து வள்ளுவர், 'எந்த எந்த விஷயத்தினின்றும் ஒருவன் தூர விலகி நிற்கிருனே, அந்த அந்த விஷயத்தினுல் வரும் துக்கத்திலிருந்து அவன் விடுதலை பெறுவான்' என்று சொல்கிருர்.

> ''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனின் அதனின் இலன்.''

ஆசையானது ஒன்றிலிருந்து ஒன்றைப் பற்றிக் கொண்டு விரிந்து படர்கிறது என்ற உண்மையை இந்த நாட்டு நூல்கள் அதிகமாகச் சொல்கின்றன. தேவைகள் வரவர அதிகமாவதுதான் நாகரிகம் என்று நினைக்கிருேம். மனித வாழ்க்கையில் பல படிகள் செல்வ நிலையால் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நிலைக்கும் தக்கவாறு தேவைகள் வரவர விரிந்துகொண்டே போகின்றன. சிறு செடியாக முளைத்துக் கொழுகொம்பைப் பற்றித்

தாவிப் பந்தல் முழுவதும் படர்ந்து அருகில் உள்ள மரத்துக்கும் தாவும் கொடிபோல நம் தேவை படர்ந்து செல்கிறது. தேவையின் ஆரம்பம் ஆலம் விதையைப்போலச் சிறிய உருவத்திலே இருக்கும். பிறகு முடிவே இல்லாமல் ஆலமரத்தைப்போலக் கப்பும் கிளையும் வேரும் விழுதும் விட்டுக் கொண்டே போகும்.

★

கூலிக்கு வேலை செய்யும் ஏழைப் பெண் ஒருத்தி நெல்லுக் குத்தி அதனால் கிடைக்கும் கூலி நெல்லைப் பெற்று வயிறு வளர்த்து வந்தாள். நெல்லைக் குத்தும் இடத்தில் அரிசியாகக் கூலியைப் பெறாமல் நெல்லாகவே பெற்றாள். வீடுதோறும் நெல்லுக் குத்தும் அவளுக்கு வீட்டில் வந்தும் நெல்லுக் குத்தவேண்டி யிருந்தது.

நெல்லைக் குத்த முதலில் உரல் வாங்கினாள். பிறகு கூலி நெல்லில் மீதம் பிடித்து உலக்கையும் வாங்கினாள். ஏதோ பழைய பானையில் சோறு ஆக்கி முதலில் உண்டு வந்தாள். நல்ல கூலி கிடைத்து வரவே உரலும் உலக்கையும் பழம் பானையுமாகிய சொத்தோடு நிற்க அவள் விரும்பவில்லை. "எவ்வளவு நாளைக்கு இந்தப் பழம் பானையை வைத்துக்கொண்டிருப்பது?" என்று நினைத்தாள். ஊர் முழுவதும் பொங்கலுக்குப் புதுப்பானை வாங்கும்போது அவள் மட்டும் பழம்பானையிலே சோறு ஆக்குவானேன்? புதுப்பானை வாங்கினாள். உரல் நெல்லைத் தன் அருமையான உலக்கையால் குத்தி எடுத்துப் புதுப்பானையில் சோறு ஆக்கித் தின்றாள். அன்று அவளுக்கு எத்தனை இன்பம் உண்டாயிற்று, தெரியுமா?

புதுப்பானைச் சோறு உடம்பில் ஊற ஊற அவளுக்கு வாழ்க்கை இனிக்கத் தொடங்கியது. வாழ்க்கையிலே என்ன என்ன சுகம் உண்டு என்பதை அவள் உலகத்திலே தினந்தோறும் பார்க்கிறாளே! "நாமே நெல்லுக்

குத்துவதும் சோறு ஆக்குவதும் தனியாகத் தின்பதுமாக இருக்கிருமே; நம்மோடு ஒருவர் இருந்து கொஞ்சிக் குலாவி உண்டால் எவ்வளவு சுகமாக இருக்கும்! ஆண் பிள்ளை இல்லாத வாழ்வு ஒரு வாழ்வா? எவ்வளவு சம்பாதித்தாலும் கணக்குப் பார்த்து வைத்துக்கொள்ளவும் இன்பம் தந்து துணையாக நிற்கவும் ஒருவன் வேண்டும்" என்ற கனவிலே அவள் உள்ளம் படர்ந்தது. முயற்சியாலும் நாணயத்தாலும் அவள் மேலும் மேலும் உயர்ந்து வந்தாள். கூலி வேலையை விட்டுவிட்டு வியாபாரம் செய்யத் தொடங்கிளுள். கையில் காசு சேர்ந்தது. கண்ணுக்கு அழகான கணவனைக் கட்டிக்கொண்டாள்.

அவள் வாழ்க்கைக்கு இனி வேண்டியது ஒன்றும் இல்லை என்ற திருப்தி ஒரு கணம் உண்டாயிற்று. ஆனுல் அது நிலைக்கவில்லை. இன்ப சுகந்தனில் ஒன்றியிருந்த அவள் காதில் யாரோ கூறிய வார்த்தை விழுந்தது. "அவள் கடைக்காரி; அவன் கணக்குப்பிள்ளை. பணம் வேகமாகச் சேர்கிறது. நல்ல வீடும் கட்டிவிட்டாள். எல்லாம் இருந்து என்ன பிரயோசனம்? செத்துப் போனுல் கொள்ளி போடப் பிள்ளை இல்லையே!" என்று அவர்கள் குறைகூறியது அவள் உள்ளத்தே தைத்தது. வாழ்க்கையில் அடுத்த தேவை குழந்தை என்ற கவலை அவளைப் பீடித்தது.

தானம் செய்தாள்; தலயாத்திரை போனுள்; விரதம் இருந்தாள். எல்லாவற்றிற்கும் போதிய செல்வம் இப்போது அவளிடம் இருந்தது. கடைசியில் குழந்தை பிறந்தது. குழந்தைக்காக மாடு வாங்கினுள். குழந்தை வளர்ந்த பிறகு தயிருக்கும் நெய்க்குமாக இரண்டு எருமை வாங்கிக் கட்டினுள். அவற்றை மேய்க்க ஒரு வேலைக்காரப் பையனை அமர்த்தினுள். தன் எருமைகளை உத்தேசித்து அவனை அன்புடன் பாதுகாத்தாள். அவனுக்குச்

சோருக்கிப் போடக் குப்பாயி என்ற பெண்ணைக் கட்டி வைத்தாள்.

குப்பாயியின் தகப்பன் குரங்காட்டி. சிறு வயசில் அவளுக்குக் குரங்கு பேன் பார்ப்பது வழக்கம். புருஷன் வீட்டிலும் பேன் பார்க்க ஒரு குரங்கு வேண்டுமென்று விரும்பி அவனிடம் சொன்னுள். அவன் எஜமானியிடம் சொன்னுன். குரங்குக் குட்டி பேன் பார்த்தால்தான் குப்பாயி சோறு சமைப்பாள். அவள் சோறு சமைத்தால் தான் வேலைக்காரப் பையன் சௌக்கியமாக இருப்பான். ஆகையால் எஜமானி ஒரு குரங்குக் குட்டி வாங்கிக் கொடுத்தாள்.

மணி ஒன்று வேலைக்காரனுக்குக் கிடைத்தது. அதைத் தன் வீட்டில் கொண்டு வந்து கட்டினுன். குரங்கு அதைக் கல்லால் அடித்து விளையாடியது. குப்பாயி பார்த்தாள். "ஒரு கொட்டாப்புளி இருந்தால் என் குரங்குக் குட்டி மணியை அடித்து விளையாடுமே!' என்று முணு முணுத்தாள். வேலைக்காரனுக்குத்தான் வேண்டியதைக் கொடுக்க எஜமானி இருக்கிருளே! கடைசியில் குரங்குக் குட்டிக்காக அவள் கொட்டாப்புளி வாங்கிக் கொடுத்தாள்.

குந்தாணி வேண்டுமென்று ஆரம்பமான ஆசை கொட்டாப்புளி வரைக்கும் வந்தது. கொட்டாப்புளி இருந்தால்தான் மணியை அடித்துக் குரங்குக் குட்டி சந்தோஷமாக இருக்கும். குரங்குக் குட்டி சந்தோஷமாக இருந்து பேன் பார்த்தால்தான் குப்பாயி சோறு ஆக்குவாள். குப்பாயி சோறு ஆக்கினுல்தான் ஒட்டப் பையன் எருமை மேய்ப்பான். அவன் மேய்த்தால்தான் எருமை பால் தரும். எருமை பால் தந்தால்தான் கைப் பிள்ளை வளரும். கைப்பிள்ளை வளர்ந்தால் தான் கணக்குப் பிள்ளையின் சாவுக்குப் பயன்படுவான். கணக்குப்பிள்ளை

இருந்தால்தான் புதுப்பானைச் சோற்றைச் சந்தோஷமாகச் சாப்பிடலாம். புதுப்பானைச் சோற்றுக்கு அரிசி வேண்டும்; அதற்கு உரலும் பொன்னுலக்கையும் வேண்டும். ஒன்றுக்கு ஒன்று இன்றியமையாத பொருளாகி உரல் முதல் கொட்டாப்புளி வரையில் பல பொருள்கள் ஒவ்வொன்ருக வந்தன. எல்லாம் அந்தப் பெண்ணின் ஆட்சிக்குள் இருந்தன. இன்னும் என்ன என்ன பொருள்கள் வந்து சேருமோ, யார் கண்டார்கள்?

இந்தக் குடும்ப விரிவைப் பின் வரும் நாடோடிப் பாடல் சொல்கிறது.

*உரல் நெல்லுக் குத்தி எடுக்கப்*
*பொன்னுலக்கை வேணுமா!*
*பொன்னுலக்கைச் சோருக்கப்*
*புதுப்பானை வேணுமா!*
*புதுப்பானைச் சோறு தின்னக்*
*கணக்குப் பிள்ளை வேணுமா!*
*கணக்குப் பிள்ளை சாவுக்குக்*
*கைப்பிள்ளை வேணுமா!*
*கைப்பிள்ளை பால்கறக்க*
*ரெட்டை எருமை வேணுமா!*
*ரெட்டை எருமை மேய்க்க ஒரு*
*ஒட்டப்பையன் வேணுமா!*
*ஒட்டப் பயலுக்குச் சோருக்கக்*
*குப்பாயி வேணுமா!*
*குப்பாயிக்குப் பேன்பார்க்கக்*
*குரங்குக் குட்டி வேணுமா!*
*குரங்குக் குட்டிக்கு மணிஅடிக்கக்*
*கொட்டாப்புளி வேணுமா!*

ஆம், எல்லாம் வேணும்; இப்படியே போய்க் கொண்டிருந்தால் பிரபஞ்சம் முழுவதும் வேண்டியதுதான்!

# தெம்மாங்கு

நாடோடிப் பாடல்களில் அமைந்த மெட்டுக்கள் பல வற்றை இலக்கியப் புலவர்களும் சாகித்திய கர்த்தாக் களும் எடுத்து ஆண்டிருக்கிறார்கள். மக்களுடைய உள் ளத்தைக் கவரும்படியான இயல்பு அத்தகைய மெட்டுக் களுக்கு இருப்பதுதான் காரணம். குறவஞ்சி என்ற பிரபந்தம், நொண்டிச் சிந்து, கும்மி முதலிய பலவகை யான பாடல்களெல்லாம் செந்தமிழும் இசையும் தெரிந்த புலவர்களுடைய சிருஷ்டித் திறமையால் உண்டானவை அல்ல. நாடோடியாக வழங்கும் பாடல்களில் கண்டவை; மலையிலும் வயலிலும் பாடும் பாடல்களிலே கண்டவை; மக்களின் உணர்ச்சியை வெளிப்படுத்த நாடோடிப் பாவலன் இயற்கையோடு ஒட்டித் தாளத்தை அமைத் துச் செய்த பாடல்களை அடியொற்றிப் பாடியவை.

இந்த வகையில் இன்றும் தெம்மாங்கு நாடோடிப் பாடலாகவே இருக்கிறது. சங்கீதக் கச்சேரிகளில் துக்க டாக்களினிடையே ஒன்றாகப் பாடப்படும் பதவி அதற்கு வந்திருந்தாலும், வண்டிக்காரனும் வழி நடப்பவனும் பாடும் பாட்டாகவே அது விளங்குகிறது.

நீண்ட சாலையில் இரவில் வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகப் போகின்றன. பாரம் ஏற்றிக் கொண்டு செல் லும் அந்த வண்டிகள் மெல்ல மெல்ல நகர்கின்றன. மாடுகள் மெதுவாகச் செல்கின்றன. இயற்கையே தூக் கத்தில் ஆழ்த்திருக்கும்போது அந்த வண்டித் தொடர் 'கடக் கடக்' என்ற சத்தத்தோடு மோனத்தைக் குலைத்துச் செல்கின்றது. வண்டிக்காரர்களுள் ஒருவன் நன்றாகப் பாடத் தெரிந்தவன். ராக தாள அறிவுடையவ

னென்று எண்ணிக் கொள்ளாதீர்கள். நாடோடி உலகத்துப் பாடல்களிலே அவன் வல்லவன். அந்த நள்ளிருளில் இருட்டின் கனத்தைக் கிழித்துக் கொண்டு புறப்படும் கணீரென்ற சாரீரம் அவனுக்கு இருக்கிறது. அவன் பாட ஆரம்பித்தால் எல்லா வண்டிகளும் அந்த இசையிலே ஒன்றிப் போய்விடும். வண்டிக்காரர் யாவரும் பேச்சை நிறுத்திப் பாட்டிலே லயித்து விடுவார்கள். சிலர் தம் கையில் உள்ள கயிற்றை வண்டியிலே கட்டிவிட்டுத் தூங்கிக் கூடப் போய்விடுவார்கள். மாட்டை விரட்டி ஓட்டவேண்டுமா? வழி மாற வேண்டுமா? ஒன்றுமே இல்லை. முதல் வண்டி போகும் போக்கைப் பின்பற்றி ரெயில் வண்டித் தொடரைப் போல அந்த வண்டிகள் அவ்வளவும் போய்க் கொண்டிருக்கின்றன.

வண்டிக்காரன் பாடும் பாட்டை அவன் தோழர்கள் மாத்திரமா கேட்கிறார்கள்? அந்த மாடுகளும் காதை நெறித்துக் கொண்டு கேட்கின்றன. மாடுகளுக்குச் சங்கீத உணர்ச்சி உண்டென்று புத்தகங்களில் எழுதியிருக்கிறார்கள். அந்தச் சாலையில் நடு நிசியில் அந்த உண்மைக்குச் சாட்சி சொல்கின்றன, வண்டியை இழுக்கும் காளைமாடுகள். விடிய விடியப் பாடிக் கொண்டே இருந்தாலும் 'வண்டி இழுக்கிறோம்' என்ற உணர்ச்சியே இல்லாமல் அவை நடந்து கொண்டே இருக்கும். வண்டிக்காரனுடைய பாட்டு அலை அலையாக எழும்பிக் காளைமாடுகளை இழுத்துச் செல்கிறது.

தெம்மாங்கு பாடுகிறான் அவன். தேன்பாங்கு என்பது அப்படித் தேய்ந்து மாறி வழங்குகிறதென்று சொல்வார்கள். தேன் எப்படி இனிக்கிறதோ அப்படி இனிக்கும் பான்மை அந்தப் பாட்டுக்கு உண்டாம், கட்டிளங்காளையாகிய வண்டிக்காரன் வண்டியிழுக்கும் காளைகளையும் மயக்கும்படியாகப் பாடும் பாட்டு அல்லவா அது?

"வண்டிக்காரன் பாட்டில் என்ன விசேஷக் கருத்து இருக்கப் போகிறது?" என்று அலட்சியம் செய்யக் கூடாது; சிறையில்லாத வான வெளியிலே பொங்கி உலாவி வரும் அவன் பாட்டில் நாடோடி இலக்கியத்திலே காணும் சுவைகள் எல்லாம் இருக்கின்றன.

வண்டிக்காரனுக்கு உலகம் முழுவதும் வண்டி உலகந்தான். அவனுக்கு உபமானமும், கனவும் வண்டியும் காளையுமாகத்தான் வரும். ஆகவே அவன் பாட்டிலும் வண்டி உருண்டு வருவதைப் பார்க்கலாம்.

வண்டிக்காரனுக்கு இப்போது ஹாஸ்ய உணர்ச்சி தோன்றுகிறது. பரிகாசமாகப் பாட்டு வரும் மன நிலை ஏற்பட்டிருக்கிறது. அவனுடைய பிரபஞ்சத்திலே சிரிப்புக்கு இடமாகும் காட்சி இல்லையா? அவன் பாட்டு அந்தக் காட்சியைக் காட்டுகிறது.

வண்டியை ஓட்டத் தெரியாமல் ஒருவன் தத்தளிக்கிருன். வண்டிக்காரன் நல்ல மாடாகப் பார்த்து வாங்கி வண்டியையும் மாட்டையும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டாமோ? கண்ணைப்போலப் பாதுகாத்தால்தானே வேண்டிய பாரத்தை ஏற்றிக்கொண்டு போய்க் காசு வாங்கலாம்? இந்தக் காலத்து வண்டிக்காரர்களைப்போல மலையளவு பாரம் ஏற்றிக் கூலியும் வாங்கிக்கொண்டு மாடுகளுக்கு வெறும் தண்ணீரைக் காட்டினுல், அந்தத் தொழில் எவ்வளவு நாளைக்கு நடைபெறும்?

பேராசைக்காரனுகிய ஒரு வண்டிக்காரனைப் பற்றிப் பரிகாசமாக அவன் மனைவியிடம் சொல்வதுபோல அமைந்திருக்கிறது தெம்மாங்கு.

*சின்னச் சின்ன வண்டிகட்டிச்*
*செவலை மாடு ரெண்டும் பூட்டி*
*வாழைக்காய்ப் பாரம் ஏற்றி*
*வாராண்டி உன் புருசன்!*

மாடுமோ செத்தல் மாடு
மணலுமோ கும்பிமணல்
மாடிழுக்க மாட்டாமல்
மாய்கிருண்டி உன் புருசன்!

★

அந்த அந்தப் பிராந்தியங்களிலே உள்ள ஊர்களும் பேர்களும் பாட்டிலே விரவி வரும்.

ஆத்தூரு வண்டி வாங்கி
அதமன் கோட்டை மாடுகட்டிச்
சேலத்துச் சாட்டை இட்டிச்
சேர்த்து ஓட்டினுன் ரங்கசாமி
—போடு கிண்ணுக்கு!

மனம்போனபடி எண்ணியும், வாய்க்கு வந்தபடி பாடியும் கட்டில்லாத வாழ்க்கையை நடத்தும் வண்டிக்காரனுக்கு எத்தனையோ செய்திகள் இருக்கின்றன, பாட்டிலே சொல்வதற்கு. ஆனாலும் புலவர்கள் படைத்த இலக்கிய உலகத்திலே எப்படிச் சிருங்கார ரசம் தலைமை வகிக்கிறதோ அப்படியே அவன் பாட்டிலும் அந்தச் சரக்குக்குத்தான் அதிக இடம் உண்டு. வரம்பு கடவாமல் செல்லும் லட்சியக்காதல் அல்ல, அவன் பாடும் காதல். வழியிலே போகும் இளம்பெண்ணைக் கண்ணடிக்கும் பழக்கம் உள்ள அவனுக்கு, அவளைப் பார்த்துச் சொல்வது போன்ற பாட்டுக்கள் சுலபமாக வருவது ஆச்சரியம் அல்ல. காயும் கறியும், பூவும் பழமும் கூடைகளிலே சுமந்துகொண்டு விற்கச் செல்லும் நங்கையரிடத்திலே அவன் உள்ளம் செல்கிறது; அதன் வழியே தெம்மாங்கு பிறக்கிறது.

வெள்ளை வெள்ளைச் சேலைக்காரி
வெள்ளரிக்காய்க் கூடைக்காரி
கோணல் மாணல் வெள்ளரிக்காய்
கொண்டு வாடி தின்று பார்ப்போம்.

ரோட்டோரம் வீட்டுக்காரி
 ரோஜாப்பூச் சேலைக்காரி
நான்வருவேன் சாமத்திலே
 நாதாங்கி போட்டிடாதே!
காடைக் கூடும் கக்கத்திலே
 கறுத்த மச்சான் பக்கத்திலே
மாடப்புறாக் குஞ்செடுக்க
 மைகளுண்டோ உன்னிடத்தில்?
மானத்திலே மீனிருக்க
 மதுரையிலே நானிருக்கச்
சேலத்திலே நீ இருக்கச்
 சேருவது எக்காலமோ!

இப்படிப்பட்ட கருத்துக்கள் இலக்கியங்களிலும் ஏறியிருக்கின்றன. மோர் விற்பவளையும், உப்பு விற்பவளையும் பார்த்துக் காமுற்றுப் பாடுவதாகக் கலம்பகம் என்ற பிரபந்த வகைகளிலே சில செய்யுட்களைக் காணலாம்.

★

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்டு காமுறுவதென்பது உலக இயற்கை. ஆடவன் தன் உணர்ச்சியைத் துணிந்து உடனே வெளியிட்டு விடுகிறான். பெண்ணோ நாணத்தால் அங்ஙனம் செய்வதில்லை. காதல் நாடகத்தைச் சித்திரிக்கும் பழைய கவிகளில் காதலனும் காதலியும் சந்திக்கும்போது காதலனே அதிகமாகப் பேசுவதாக அமைப்பது புலவர் மரபு. பிறகு அவளும் தன் உணர்ச்சிகளைத் தோழியிடம் வெளியிடுவாள். வண்டிக்காரன் பாடும் தெம்மாங்கில் வரும் காதல் ஒருதலைக் காமம் அல்ல. ஆடவன் தன் உணர்ச்சியை வெளியிடுவதைப் போலவே பெண்ணும் வெளியிடுகிறாள். சாலை வழியே போகும் கட்டிளங்காளையின் நடையைக் கண்டே அவள் சொக்கிப் போகிறாள். அதைத் தெம்மாங்காகப் பாடுகிறான் வண்டிக்காரன்.

நானும் நட்டிருப்பேன்
நட்டப்பாரையும் பார்த்திருப்பேன்—இந்தச்
சாமி நடையைப் போலச்
சாலவழி கண்டதில்லை!

தின்னுடைய காதற் குறிப்பைத் தன் காதலனுக்குத் தூது மூலமாகச் சொல்லி அனுப்பி விட்டாள் ஒரு நங்கை. அந்தத் தூது அவன் காதுவரைக்கும் எட்டி யிருக்குமோ இராதோ என்று சந்தேகம் உண்டாகிறது அவளுக்கு. பொருமுகின்ற உள்ளத்தை அடக்கிப் பார்க்கிருள்; முடியவில்லை. எப்படியாவது வாய்விட்டு உணர்ச்சியைக் கொட்டிவிட வேண்டுமென்று நினைக் கிருள். மிகவும் அழகாகக் குறிப்பாகப் பாட்டு எழுகிறது.

ஓடுகின்ற தண்ணீரிலே
உரைத்துவிட்டேன் சந்தனத்தை;
சேர்ந்ததோ சேரலையோ
செவத்தபையன் நெத்தியிலே?

மற்றொருத்தி தன் குறையைச் சொல்லிக் கொள்கிருள் :

பூவரசம் போத்து வெட்டிப்
பொன்னுலே ரோட்டுப் போட்டுத்
தங்கக் கொழுந்தனுக்குத்
தலைபார்க்க நேரமில்லை!

தன் கருத்து நிறைவேருமல் போனதை ஒரு பெண் சொல்லிப் புலம்புகிருள் :

கம்புகுத்திச் சோருக்கிக்
கடலைப் பருப்பாக்கி
வட்டியிலே போடையிலே
வந்துதடி தூக்குமரம்

தூக்குமரம் என்னசெய்யும்
சூட்சக் காது என்ன செய்யும்?
மாடு தின்னி வெள்ளைக்காரன்
மாயமாய்ப் பறக்கிருண்டி!

# சங்கேத சம்பாஷணை

நாடோடியாக வழங்கும் பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் எல்லாம் நாடோடி இலக்கியத்தின் வகைகள். இளஞ் சிறுவர் சிறுமிகளுக்கு யோசிக்கும் சக்தியையும் உற்சாகத்தையும் உண்டாக்கும் விடுகதைகள் ஒவ்வொரு மொழியிலும் உள்ளன. தமிழில் பண்டைக் காலத்தில் அவற்றைப் பிசி என்று சொல்லி வந்தார்கள். தொல்காப்பியத்தில் பிசியின் இலக்கணம் சொல்லப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் புதிர் என்றும், விடுகதை, அழிப்பான் கதை, வெடி, நொடி என்றும் வழங்கும்.

விடுகதைகளில் பல வகைகள் உண்டு. ஒரே பொருளைக் குறிப்பாகச் சொல்வதும், சம்பந்தம் உள்ள பல பண்டங்களைக் குறிப்பிப்பதும், தொடர்பில்லாத பல பொருள்களை விடையாகக் கொண்டதும் ஆக விடுகதைகள் அமைந்திருப்பதைக் காணலாம். தினந்தோறும் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பற்றிய விடுகதைகள் பல. தொழிலாளிகள் தங்கள் தங்கள் தொழில் சம்பந்தமாக அமைத்துச் சொல்லும் விடுகதைகள் பல. நாடோடி இலக்கியத்தில் வாழ்க்கையின் பல திறப் பகுதிகளின் போக்கும் சுவடு விட்டிருக்கும். இந்த இலக்கணம் விடுகதைகளுக்கும் பொருந்தும்.

சில விடுகதைகள் கதையைப்போலவே விரிவாக இருக்கும். சின்னச் சின்ன விடுகதைகளுக்குப் புதிர் அல்லது பிதிர் என்ற பெயரே மிகவும் பொருந்தும். கதை

போல வருவனவற்றை விடுகதை என்ற பெயரால் குறிப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

அத்தகைய கதைகளில் சம்பாஷணைகள் இருக்கும். அவை சங்கேதமாக, குறிப்புப் பொருளுடன், கேட்பவர் சிந்தனையைத் தூண்டுவனவாக அமைந்திருக்கும். மிகவும் சிக்கலான செய்திகளையுடைய இந்தச் சங்கேத சம்பாஷணைகள், யோசிக்க யோசிக்க உற்சாகத்தையும், விடை கண்டு பிடித்தவுடன் மகிழ்ச்சியையும் உண்டாக்கும். சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

## 1

ஒருவன் தன் மனைவியை விட்டு வெளியூருக்குப் போயிருந்தான். அப்போது அவனுடைய நண்பன் ஒருவன் அவனைப் பார்க்க வந்து வாசலில் தன் செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு உள்ளே சென்றான். அவன் சென்ற அடுத்த கணத்தில் ஊருக்குப் போனவன் திரும்பி வந்துவிட்டான். வந்து தன் வீட்டுக்குள் நுழையும்போது வாசலில் யாரோ செருப்பு விட்டிருப்பதைப் பார்த்தான். இயல்பாகவே தன் மனைவியிடம் வெறுப்படைந்திருந்த அவனுக்கு இப்போது அவளிடம் சந்தேகம் வேறு உண்டாகிவிட்டது. உடனே எங்கோ போய்விட்டு, உள்ளே சென்ற நண்பன் போன பிறகு வீட்டுக்குப் போனான். ஏதோ காரணம் சொல்லித் தன் மனைவியைப் பிறந்தகத்துக்கு அனுப்பிவிட்டான்.

உண்மை அன்பும் ஒழுக்கமும் அமைந்த அந்தப் பெண்மணி மிகவும் துயரத்துக்கு ஆளாகிறாள். தன் பிறந்தகத்துக்குச் சென்றது முதல் உணவே உண்ணாமல் சோர்ந்து கிடக்கிறாள். அவளுடைய சகோதரன் அவள் நிலையைக் கண்டு மிகவும் வருந்தி, என்ன செய்யலாம் என்று யோசிக்கிறான்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் அந்தப் பெண்மணியின் கணவனும் சகோதரனும் சந்தேகத்துக்குக் காரணமான நண்பனும் ஒரு சத்திரத்தில் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் ஒருவருக்கு ஒருவர் குரோதம் பாராட்டாமல் பழகுகிறவர்கள். ஆகையால் பெண்மணியின் சகோதரன், "மூவரும் ஏதேனும் விளையாடலாம்" என்று சொல்லிப் பகடை உருட்டி விளையாட ஏற்பாடு செய்கிறான்.

விளையாட்டு ஆரம்பமாகிறது. சகோதரனுக்கு விளையாட்டின்மேல் நோக்கம் இல்லை. தன் தங்கை புருஷனது சந்தேகத்தைப் போக்கிச் சமாதானம் செய்ய அவன் வழி தேடிக் கொண்டிருக்கிறான்.

பகடை உருட்டும் பொழுது எதையேனும் பாடுவது வழக்கம். சகோதரன் அந்தப் பாட்டின் மூலமாகத் தன் தங்கை நிலையைக் குறிப்பிக்கலாம் என்று எண்ணுகிறான். இளங்குமரியாகிய தன் தங்கை ஏழு நாட்களாக அன்ன ஆகாரம் இன்றி வாடுகிறாள் என்பதைச் சங்கேதமாகத் தெரிவித்து விடுகிறான்.

சகோதரன்

*ஏதேது வாழை*
*இளவாழை செவ்வாழை*
*ஏழுநாள் ஆச்சு,*
*தண்ணீர் குடித்து*
*உருட்டேடா பகடை!*

இதை அப்பெண்மணியின் கணவனும், சந்தேகம் உண்டாகக் காரணமாக இருந்த நண்பனும் கவனிக்கிறார்கள். அந்தக் குறிப்புப் பாட்டு அவர்கள் உள்ளத்திலே புகுந்து கிளர்ச்சியை உண்டாக்கி விட்டது.

நண்பன் ஒருவாறு விஷயத்தை உணர்ந்திருக்கிறான். தன் அன்பனைப் பார்க்கச் சென்றபோது அவன் மனைவி

கொல்லைக் கிணற்றிலே நீர் எடுக்கச் சென்றிருந்தாள். அவள் வரும்வரையில் காத்திருந்து அவன் ஊரில் இல்லையென்பதைத் தெரிந்து கொண்டு வந்தான் அவன். இவ்வளவுதான் அவன் செய்தது.

அநாவசியமான சந்தேகத்துக்குத் தான் காரணமாகி விட்டதை உணர்ந்த பிறகு, சந்தேகத்தைத் தெளி விக்கும் சந்தர்ப்பத்தை அவனும் ஆவலாக எதிர்பார்த் திருந்தான். இப்போது அது முன்னே வந்து நிற் கிறது. அவன் உண்மையை அதே குறிப்புப் பாஷை யில் சொல்கிருன். "நான் அந்த வீட்டுக்குள் போனேன். தவருன காரியம் ஒன்றும் செய்யவில்லை" என்பதை அவன் பாட்டிலே குறிப்பிக்கிருன்.

நண்பன்

*பூங்கா வனத்துக்குப்*
*போனதுண்டு*
*பூவுடை வாசனையைக்*
*கண்டதில்லை*
*உருட்டேடா பகடை!*

இவ்விருவர் சங்கேதப் பாடல்களும் கணவனது கண்ணைத் திறக்கின்றன. உண்மை இதுவென்றும், தன் மனைவி படும் வேதனை இத்தகையதென்றும் அறிந்து அவன் பச்சாத்தாபப் படுகிருன். "நான் செருப்பைப் பார்த்து ஏமாந்து போனேன். குற்றம் செய்ததாக வேறு எந்தச் சாக்ஷியும் இல்லை" என்பதை ஒப்புக்கொள்கிருன். அந்தக் கருத்தும் பகடைப் பாட் டாகவே வெளியாகிறது.

கணவன்

*ஆனையடி பாதத்தைக்*
*கண்டதுண்டு-நான்*
*அந்தத் தோஷத்தை*
*ஆனல் கண்டதில்லை*
*உருட்டேடா பகடை!*

விளையாட்டு வினையாகிறது; நல்ல வினையாக முடிகிறது. கணவன் தன் மனைவியை மூன்ரும் பேரிடம் சொல்லாமல் மீட்டும் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு சென்று விடுகிருன்.

## 2

ஒரு கணவன் ஏதோ மனஸ்தாபத்தால் தன் மனைவி மேல் கோபித்துக் கொண்டு அடித்துத் துரத்திவிட்டான். முன் கோபத்தால் அப்படிச் செய்து விட்டாலும் பிறகு அவளைத் தேடிக் கொண்டு புறப்பட்டான். வழியிலே ஒருவனைக் கண்டு,

ஆற்றுக்குப் பகையாய் இருக்கும்
மரத்தின் கீழே இருந்து
வேலியைப் பட்ல் கட்டுகிறவனே!
மூவர் இரு காலால் நடக்கக்
கண்டாயோ?

என்று கேட்டான்.

அத்ற்கு அவன் விடை சொல்கிருன்.

அவன் செத்து மூன்று நாள் ஆச்சு.
அவனைக் கொன்றவன் செத்து
ஆறு நாள் ஆச்சு.
அவனைச் சுட்டவன் செத்து
ஆறு மாதம் ஆச்சு

என்று சொன்ஞன்.

இந்த இரண்டும் சங்கேத சம்பாஷணை.

நெசவுகாரன் ஒருவன் தேற்ரு மரத்தின் கீழே பாவு போட்டிருந்தான். அவனைப் பார்த்துத்தான் கணவன் கேட்டான். ஆற்றுக்குப் பகையென்றது கலங்கல் நீரைத் தெளியச் செய்யும் கொட்டையைத் தரும் தேற்ரு

மரத்தை. மனிதர் வேலியைப்போலச் சுற்றி உடுக்கும் ஆடையின் பொருட்டுப் பாவு ஓட்டுபவன் என்பதை, "வேலிக்குப் படல் கட்டுகிறவனே" என்று குறிப்பித்தான். தன் மனைவி இடுப்பில் ஒரு குழந்தையையும் வயிற்றில் ஒரு குழந்தையையும் சுமந்து சென்றுள் என்பதை, "மூவர் இரு காலால் நடக்கக் கண்டாயோ?" என்பதனுல் தெரிவித்தான்.

அவள் இடையில் ஓரிடத்தில் தண்ணீர் குடித்தபோது அந்தத் தண்ணீரில் ஆறு நாளாகச் செத்துக் கிடந்த சிறு பாம்பின் விஷத்தால் அவள் இறந்தாள். ஊரார் ஆறு மாதத்துக்கு முன் வெட்டி உலர்த்தின மரத்தின் விறகைக் கொண்டு தர்மத்துக்கு எரித்து விட்டார்கள். இதையே அந்த நெசவுகாரன், "அவள் செத்து மூன்று நாள் ஆச்சு. அவளைக் கொன்றவன் (பாம்பு) செத்து ஆறு நாள் ஆச்சு. அவளைச் சுட்டவன் (மரம்) செத்து ஆறு மாசம் ஆச்சு" என்று சங்கேத பாஷையில் தெரிவித்தான்.

## 3

ஒரு புருஷனுக்கு ஒரு பெண்ணின் மேல் காதல் உண்டாயிற்று. ஒவ்வொரு நாளும் அவள் கடைவீதி வழியே போவாள். அப்பொழுதெல்லாம் அவள் நடையழகையும் உருவழகையும் பார்த்துப் பார்த்து மகிழ்வான். அவள் தன்மேல் காதல் கொள்வாளோ மாட்டாளோ என்ற ஐயத்தால், சில காலம் இப்படி அவளைக் கண்டு களிப்பதோடு நின்றிருந்தான்.

அவள் கடைவீதி வழியே செல்லும்போது சில நாள் அவளை அழைத்துக்கொண்டு ஒரு முதியவர் செல்வார். முதியவரானுலும் முறுக்குத் தளராதவர். மார்பில் சந்தனம் பூசியிருப்பார். கையில் கைத்தடியும் மற்ருெரு

கையில் விசிறியும் பிடித்திருப்பார். பாதக் குறட்டின் மேல் நடந்து செல்வார். அவருடைய முகத் தோற்றத்தால் அந்த அழகிய பெண்ணுக்கு அவர் தகப்பனாராக இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

அழகியின் எழிலிலே ஈடுபட்ட ஆடவன் அவள் தகப்பனாரையும் பார்த்தான். அவர் வராத நாளில் எப்படியாவது அவ்வணங்கினிடம் தன் காதலைத் தெரிவித்து விட வேண்டுமென்ற வேகம் அவனுக்கு உண்டாயிற்று.

காதல் உடையவர்கள் வெளிப்படையான பாஷையில் பேசினால் ரசம் இராது. காதலுக்குப் பாஷையே இல்லை. வெறும் குறிப்புக்களால் தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதுதான் காதற் பிரபஞ்சத்தின் சம்பிரதாயம். அதற்கு மேலே போனால் குறிப்பான பேச்சால் சில வார்த்தைகளைக் கொண்டு பல செய்திகளைத் தெரிவிப்பதுதான் காதல் உலகத்து மொழி.

ஆடவன் அவளை என்ன கேட்பது, எப்படிக் கேட்பது என்ற விஷயங்களை நன்றாக ஆலோசித்தான். "நான் உன்மேல் ஆசைப்படுகிறேன்; உனக்கு என்மேல் ஆசை உண்டா இல்லையா?" என்று கேட்கலாமா? அது வியாபாரிகளின் பாஷை அல்லவா? காதலில் பேச்சு வெறும் வியாஜமாகத்தான் இருக்க வேண்டும். ஒருவிதமாக அவன் இன்னது பேசுவது என்று தீர்மானம் செய்து கொண்டான்.

அவள் நல்ல வேளையாக அன்று தனியே வந்தாள். அதைக் கண்டவுடன் அவனுக்கு ஊக்கம் உண்டாயிற்று. "இதுவும் நல்ல சகுனந்தான்" என்று எண்ணிக் கொண்டான். மெல்ல அவளைப் பின் தொடர்ந்தான்.

கடைவீதிக் கூட்டத்தில் அவளை வெளிப்படையாக அழைத்துப் பேசலாமா? அவள் நாணத்தை விட்டு விட்டுப் பதில் சொல்லுவாளா? எல்லாம் சங்கேத

சம்பாஷணையாக நடக்க வேண்டும். அவன் ஏதோ ஒரு பாட்டைப் பாடுகிறவனைப் போல ஆரம்பித்தான்.

*ஒரு மரம் ஏறி, ஒரு மரம் பூசி*
*ஒரு மரம் பிடித்து, ஒரு மரம் வீசிப்*
*போகிறவன் பெண்ணே உன்*
*வீடு எங்கே?*

தெளிவாக அர்த்தம் புரியாமல் உள்ள இந்த வார்த்தைகளைக் கூட்டத்தில் உள்ளவர்கள் யாரேனும் கவனித்தால், ''ஏதோ பைத்தியக்காரப் பாட்டைப் பாடுகிறான்'' என்று நினைத்துப் போய் விடுவார்கள். ஆனால் அந்தப் பெண் அறிவுடையவளாக இருந்தால் அதன் பொருளை உணர்ந்து கொள்வாள். அவன்மேல் காதல் உடையவளாக இருந்தால் பதிலும் சொல்வாள். இரண்டும் இல்லாதவளானாலோ அவனுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. கேட்ட கேள்வி காற்றோடு போய் விடுகிறது.—இந்தத் துணிவுடன்தான் அவன் அந்தக் கேள்வியைக் கேட்டான். அவள் அறிவுடையவள்; காதலும் உடையவள். ஒரு நாளைப்போலத் தன்னையே உற்றுக் கவனிக்கும் ஒரு கட்டிளங்காளைக்கு முன்னால் தினமும் போய்க் கொண்டிருக்கும் அவள் ஒரு நாளாவது அவனைக் கவனிக்காமலா இருப்பாள்? அப்படிக் கவனிக்கும்போது அவனுடைய உள்ளக் குறிப்பு அவளுக்குப் புலனாகாமற் போகாதே. அவன் செயலை அவள் விரும்பாவிட்டால் வேறு வழியாகவோ, வேறு வேளையிலோ அவள் போகக் கூடுமே. ஒரே வழியில் ஒரே சமயத்தில் அவன் கண்களுக்கு விருந்தளிக்க வருபவளைப் போலவே அல்லவா அவள் காட்சி அளிக்கிறாள்? அவளுடைய உள்ளத்திலும் காதல் புகுந்து விட்டது தான் காரணம். அவனுடைய கேள்வியை அவள் தெரிந்து கொண்டாள். ஒரு மரமாகிய பாதக் குறட்டுக் கட்டையின் மேலே ஏறி, ஒரு மரமாகிய சந்தனத்தைப்

பூசிக் கொண்டு, ஒரு மரமாகிய கைத் தடியைப் பிடித்து, ஒரு மரமாகிய பனையோலை விசிறியை வீசிக்கொண்டு செல்லும் தன் தகப்பனுரை அவன் கவனித்திருக்கிறுன் என்பதையும் உணர்ந்தாள். அவள் வீடு இருக்கும் இடத்தை அவன் கேட்கிறுன். தனிமையிலே வந்து அவளைக் கண்டு அளவளாவத்தான் அப்படிக் கேட்கிறுன். அப்படிச் செய்வதில் அவளுக்கு இணக்கம் உண்டென் பதை அவன் உணர வழி என்ன? அவள் தக்க பதில் சொன்னுல் உணர்ந்து கொள்வான். அவள் விடை சொல்லுகிறுள்.

*பாலுக்கும் பானைக்கும் நடுவிலே*
*ஊசிக்கும் நாலுக்கும் அருகிலே*

என்று விடை கூறினுள்.

அவளும் சங்கேதமாகவே பேசினுள். அவள் வீடு பானை பண்ணும் குயவன் வீட்டுக்கும், பால் விற்கும் இடையன் வீட்டுக்கும் நடுவில், ஊசி பண்ணும் கொல்லன் வீட்டுக்கும் நூலைப் பாவோடும் சேணியன் வீட்டுக்கும் அருகிலே இருக்கிறதென்பதைச் சொல்லி விட்டாள். அவனும் உணர்ந்து கொண்டான். மேலே அவன் கேள்வி போடுகிறுன்.

*நான் எப்போது வரலாம்?*

அவள் உடனே பதில் சொல்லுகிறுள்.

*இந்த ராஜா செத்து*
*அந்த ராஜா பட்டம்*
*கட்டிக்கொண்டு*
*மரத்தோடு மரம் சேர்ந்த பிறகு*
*வந்து சேர்.*

சூரியன் அஸ்தமித்துச் சந்திரன் உதயமான பிறகு வீட்டிலுள்ளவர்கள் கதவைச் சார்த்தும் பொழுது கதவு

நிலையும் கதவும் சேர்ந்து விடும். அந்தச் சமயத்தில் நள்ளிரவிலே வருவாயாக என்று சங்கேதத்தால் தெரிவிக்கிருள் காதலி.

சங்கேத சம்பாஷணை முடிகிறது. இனிப் பேச்சு எதற்கு?

## 4

ஒரு பிராமணர் ஒரு மகனைப்பெற்று வைத்துவிட்டுக் காசிக்குப் போனர். காசியிலேயே மனம்பற்றிவிட்டதனல் பல வருஷங்கள் அங்கேயே தங்கிவிட்டார். பிறகு தாம் பிறந்த நாட்டையும் ஊரையும் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் புறப்பட்டு வந்தார். தம் ஊருக்கு வந்து பார்த்தபோது அவருக்குத் தெரிந்தவர் யாரும் இல்லை. எல்லாம் புது முகங்களாக இருந்தன. அவர் இருந்த வீடு இடிந்து போய் அந்த மனை யார்கைக்கோ மாறி விட்டது. அவருடைய மனைவி இறந்து விட்டாளென்றும் தெரிந்து கொண்டார். ஆனல் மகன் என்ன ஆனன் என்பதைச் சொல்வார் இல்லை.

தாய் நாட்டை மிதித்தவுடன் அவருக்கு, "இனி இங்கேயே வசிக்க வேண்டும்" என்ற விருப்பம் எழுந்தது. தனி மனிதராக வாழ்வது கஷ்டம். ஆகையால் யாரேனும் ஓர் ஏழைப் பிராமணனுடைய பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு குடியும் குடித்தனமுமாக வாழலாம் என்று தீர்மானம் செய்தார். அவருக்குச் சற்றேறக்குறைய அறுபது வயசு இருக்கலாம். ஆனலும் உடம்பு தளரவில்லை.

தமக்குப் பெண் கொடுப்பார் உண்டா என்று தேடிக் கொண்டு புறப்பட்டார் அந்தப் பிராமணர். பல கிராமங்களுக்குச் சென்றும் தம் கருத்து நிறைவேருமல் நம்பிக்கை இழக்குந் தருணத்தில் இருந்தார். அப்போது அவருக்கு நம்பிக்கை உதயமாகும்படியான சந்தர்ப்பம் நேர்ந்தது.

புதிய கிராமம் ஒன்றை அடைந்து ஒரு பிராமணர் வீட்டு வாசல் திண்ணையில் அவர் உட்கார்ந்தார். அது யாரோ ஏழை ஒருவருடைய குடிசை. மிகவும் களைப்போடு உட்கார்ந்து, "யாரப்பா குழந்தை, கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா அப்பா" என்று கேட்டார். உள்ளே இருந்து வீட்டுக்காரப் பிராமணன் வெளியே வந்து அவரைக் கண்டு தீர்த்தம் கொடுத்துப் பேசலானான். பேச்சினிடையே, வந்த பிராமணர் கல்யாணம் செய்துகொள்ளும் விருப்பம் உடையவர் என்பதை ஏழைப் பிராமணன் தெரிந்து கொண்டான். அவனுக்கு வயசு வந்த பெண் ஒருத்தியும், ஒரு பிள்ளையும் இருந்தனர். அந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் செய்யும் சக்தி இல்லாமல், யாராவது இரண்டாந்தாரமாகப் பண்ணிக் கொண்டால் கொடுத்து விடலாமென்றெண்ணி அதற்கு ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருந்தான். காசிவாசிப் பிராமணரைக் கண்டவுடன் தெய்வமே அவரைக் கொண்டு வந்து விட்டதாக எண்ணினான்.

கல்யாணப் பேச்சு ஆரம்பமாயிற்று; கல்யாணம் செய்வதென்ற தீர்மானமும் ஆயிற்று.

அந்த வீட்டில் ஒரு கிழவி இருந்தாள். அவள் பழைய சமாசாரமெல்லாம் தெரிந்தவள். மாப்பிள்ளையாக வரப்போகிற பிராமணரை அவள் உற்று உற்றுக் கவனித்தாள். அவரை என்னவோ கேட்க வேண்டுமென்று அவள் துடித்தாள்.

பிராமணர் திண்ணையில் இருந்தார். சமையல் ஆன பிறகு அவரை உள்ளே அழைத்து வரும்படி அந்தக் கிழவி, வீட்டுக்காரனுடைய சிறு பிள்ளையை அனுப்பினாள். "நீ போய் அவரைச் சாப்பிடக் கூப்பிடு. இந்தப் பாட்டைச் சொல்லிக் கூப்பிடு" என்று சொல்லி அனுப்பினாள். அவனும் அப்படியே போய்ச் சொல்லிக் கூப்பிட்டான்.

*காசி வாசிப் பிராம்மணரே*
*பகல் வந்த முறைக்கு நான் மைத்துனனே*
*மகனா ராகிய மாமனார் கூப்பிடுகிறார்*
*சாப்பிட வாரும் பாட்டனாரே!*

இதைக் கேட்டவுடன் காசிவாசிக்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்ன!" என்று திடுக்கிட்டுப் போனார். பேசாமல் உள்ளே போய்ச் சாப்பிட்டார். "இந்தப் பாட்டை யார் அப்பா சொன்னார்?" என்று கேட்டார். "பாட்டி" என்று பதில் வந்தது. "பாட்டி யார்?" என்று கேட்டார் கிழவர். "உங்களைத் தெரிந்து கொண்டவள்" என்று விடை கிடைத்தது.

"ஒரு மகாபாதகத்திலிருந்து என்னைத் தப்புவித்தீர்கள். இந்தக் கல்யாணம் வேண்டாம்" என்று சொல்லி அவர் மீண்டும் காசிக்கே போய்விட்டார். அவர் ஏழைப் பிராமணனுக்குச் சொந்தத் தகப்பனார்!

# மாமியாரும் மருமகளும்

இந்த நாட்டில் மாமியார் மருமகள் சண்டையென்பது மனித சமுதாயம் உண்டான நாளிலிருந்தே ஏற்பட்டிருக்க வேண்டும் போலும்! பல நூற்றுண்டுகளுக்கு முன்னும் அதே நிலை, இன்றும் அதே நிலை இருக்கிறது என்ருல் நம்முடைய சமுதாய வாழ்விலே புரையோடிப் போன புண் என்றுதான் இதைச் சொல்லவேண்டும்.

இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன் தமிழில் உண்டான நூல் வரிசைகளுள் நாலடியார் என்ற நீதி நூல் ஒன்று. ஜைன முனிவர்களால் இயற்றப்பட்ட 400 பாடல்களை உடையது. அதில் ஒரு பாட்டு வருகிறது. உலகில் அறிவுடையவனிடம் செல்வம் இருப்பதில்லை; செல்வம் உள்ளவனிடம் அறிவு இருப்பதில்லை. இரண்டும் சேர்ந்து ஓரிடத்தில் மிகவும் அருமையாகத் தான் இருக்கின்றன. இந்தக் கருத்தைப் புலவர்கள் அன்றும் சொல்லியிருக்கிருர்கள். இன்றைக்கும் நாம் சொல்லிக்கொண்டிருக்கிரேம். அன்று புலவனென்றும் மன்னனென்றும் இரண்டு சாதியைப் பிரித்துச் சொன்ஞர்கள். இன்று எழுத்தாளனென்றும் முதலாளியென்றும் பிரித்துச் சொல்லுகிருர்கள்.

செல்வமும் கல்வியும் ஒன்று சேராததற்கு ஜைன முனிவர் இந்த நாட்டுச் சம்பிரதாயத்துக்குப் பொருத்தமான காரணம் ஒன்றைக் கண்டு பிடித்தார். கல்விக்குக் கடவுளாக நாமகளைக் கொண்டாடுகிரேம். அப்படியே செல்வத்திற்குத் தெய்வமாக மகாலக்ஷ்மியை வைத்துப் போற்றுகிரேம். மகாலக்ஷ்மி திருமாலின் தேவி. நாமகள்

பிரமதேவன் பத்தினி. திருமாலுக்குப் பிரமதேவன்பிள்ளை முறையுடையவன். ஆகையால் திருமகளுக்கு நாமகள் மருமகள் ஆகவேண்டும். மாமியாருக்கும் மருமகளுக்கும் இந்த நாட்டில் ஒற்றுமை இருக்கலாமா? சம்பிரதாய விரோதம் அல்லவா? ஆகையால் எங்கெங்கே மாமியாராகிய திருமகள் உறைகிருளோ அங்கெல்லாம் மருமகளாகிய நாமகள் தலைகாட்ட நாணுவாளாம். நாமகள் வந்து ஆக்கிரமித்து விட்டாள் என்று தெரிந்தால் திருமகள் மெல்ல நழுவி விடுவாளாம்.

நாவின் கிழத்தி உறைதலால் சேராளே
பூவின் கிழத்தி புலந்து

என்று புலவர் சொல்கிருர். நாவின் கிழத்தி-கலைமகள். பூவின் கிழத்தி-திருமகள். புலந்து-கோபித்து.

இலக்கியத்தில் இப்படி இலை மறைவு காய் மறைவாக உள்ள விஷயம் வாழ்க்கையில் வெளிப்படையாக இருக்கிறது. மாமியாருடைய கொடுமைக்கு ஆளான பேதை மருமகள் தான் மாமியார் ஆகும்போது பழைய கஷ்டங்களை மறந்து போகிருள். அந்தப் பதவிக்கென்று தனியாக அமைந்துள்ள அதிகாரமும், பொருமையும், கலகமிடும் குணமும், புறங் கூறுவதும் எப்படியோ அவளிடம் வந்து சேர்ந்துவிடுகின்றன.

வாழ்க்கையில் உள்ள செய்திகளை உள்ளபடியே எடுத்துக் காட்டுவது நாடோடி இலக்கியம். வாழ்க்கை அநுபவத்தின் சாரமென்று சொல்லத் தகும் பழமொழிகளிலும், நாடோடிப் பாடல்களிலும், நாடோடிக் கதைகளிலும் மாமியாரின் திருவிளையாடல்களை ஆயிரம் வகைகளில் கேட்கிருேம். மாமியார் மருமகள் யுத்தத்தைப் பற்றி வழங்கும் செய்திகளையெல்லாம் ஒன்ருகத் திரட்டி வகுத்து அமைத்தால் அது பெரிய பாரதக் கதையைப் போல ஆகிவிடும்!

"மாமியார் மெச்சின மருமகள் இல்லை" என்றும், "மாமியார் உடைத்தால் மண்கலம். மருமகள் உடைத்தால் பொன்கலம்" என்றும், "வர வர மாமியார் கழுதை போல் ஆனாள்" என்றும் வரும் பழமொழிகளுக்கு உதாரணமாக வழங்கும் கதைகள் ஒன்றல்ல இரண்டல்ல.

★

ஒரு வீட்டில் மாமியார் காலையில் ஆற்றுக்கு நீராடப் போயிருந்தாள். அப்பொழுது பிச்சைக்காரன் ஒருவன் அந்த வீட்டிற்குப் பிச்சை கேட்க வந்தான். உள்ளே இருந்த மருமகள், "பிச்சை இல்லை, போ" என்று சொல்லி விட்டாள். அவன் முணுமுணுத்துக்கொண்டே போய் விட்டான். போகும்போது அவனுக்கு எதிரே மாமியார் ஆற்றிலிருந்து திரும்பிவந்துகொண்டிருந்தாள்.

முணுமுணுத்துக் கொண்டே போன பிச்சைக்காரனைக் கண்டதும், "ஏன் அப்பா முணுமுணுக்கிறாய்?" என்று மாமியார் கேட்டாள்.

"அதோ, அந்த வீட்டுக்குப் போய்ப் பிச்சை கேட்டேன்; இல்லையென்று வீட்டுக்கார அம்மாள் சொல்லி விட்டாள். முதல் முதலில் இல்லையென்ற வார்த்தையை இன்று கேட்டேன்" என்று சொன்னான்.

"வீட்டுக்கார அம்மாளா? அது யார்?" என்று மாமியார் உரத்துக் கேட்டாள்.

"அதுதான் அம்மா, அந்த வீட்டு அம்மாள்" என்று குறிப்பினால் அவன் புலப்படுத்தினான்.

"அப்படியா, சங்கதி! இந்தா, என்னுடன் வா" என்று மாமியார் அவனிடம் சொன்னாள். அவன், "நல்ல வேளை! நமக்கு ஏதாவது கிடைக்கும்" என்ற ஆசையோடு போனான்.

மாமியார் நேரே வீட்டுக்குள் போனவள் உள்ளே போய்க் குடத்தை இறக்கி வைத்து விட்டு, மருமகளிடம்

ஏதோ இரைச்சல் போட்டாள். பிறகு வெறுங்கையுடன் வெளியிலே வந்தாள். "ஏ, பிச்சைக்காரா, வீட்டுக்கார அம்மாள் என்று சொன்னுயே, அவள் அல்ல வீட்டு எஜமானி. நான்தான் எஜமானி. அவளுக்கு அதிகாரம் ஒன்றும் இல்லை. அவள் இல்லையென்று சொன்னதை நீ மறந்துவிடு. இதோ நான் சொல்கிறேன்: பிச்சை இல்லை. போ" என்று சொல்லி விடுவிடுவென்று உள்ளே போய் விட்டாள்.

இல்லையென்று சொல்வதற்கும் மருமகளுக்கு அதிகாரம் இல்லையாம்!

★

மாமி ஒருத்தி மருமகளை ஆண்ட கதை ஒன்று பாட்டாக நாடோடி இலக்கியத்தில் வருகிறது.

புருஷன் கோட்டைக்குச் சென்று உத்தியோகம் பார்க்கிறவன். மருமகள் புதியவள். மாமியாரும் நாத்தியும் வீட்டு ராஜ்யத்தில் செங்கோல் செலுத்துபவர்கள். அவர்கள், புருஷன் வேலைக்குப் போன பின்பு மருமகளை அதட்டி மிரட்டி வேலை வாங்கினார்கள்.

*மாமி ஒருத்தி*
*மருமகளை ஆண்ட கதை:*
*பூமி அதிர்ந்ததுவாம்*
*பூலோகம் பொங்கினதாம்!*
*கொற்றவனர் காலையிலே*
*கோட்டைக்குப் போனபின்பு*
*வாடி சிறுக்கி என்றாள்,*
*வரகை அரையும் என்றாள்.*
*போடி சிறுக்கி என்றாள்,*
*புழுங்கல்நெல்லைக் குத்தும்என்றாள்,*
*தாதிமார் தம்முடனே*
*தண்ணீர்க்குப் போம்என்றாள்*

*வெள்ளாட்டி தன்னுடனே*
*வேலைகளைச் செய்யும்என்றான்.*

கோட்டைக்குப் போன கணவன் வந்து பார்க்கும் பொழுது அந்தச் சிறுபெண் உடல் குலைந்து உள்ளம் குலைந்து நிற்கிறாள்.

*கோட்டைக்குப் போயிருந்த*
*கொற்றவனார் வந்தபின்பு,*
*முத்துப்போல் கண்ணீரை*
*முகமெங்கும் சோரவிட்டாள்.*
*பவளம்போல் கண்ணீரைப்*
*பக்கமெங்கும் சோரவிட்டாள்.*

பார்த்தான் கணவன். 'இந்தப் பெண்ணுக்கு இப்படி முகவாட்டம் உண்டாகக் காரணம் என்ன?' என்று யோசித்தான். 'இவளுக்கு என்ன குறை?' என்று எண்ணிப் பார்த்தான். பெண்களுக்கு ஆசைப் பண்டம் ஆடையும் நகையுந்தானே? அகில லோகமும் பிரளய முழக்கம் இருந்தாலும் அவர்கள் மேனியில் ஆபரணம் குலுங்கினால் அவர்கள் ஆனந்தக் கடலில் அமைதியாக மூழ்கியிருப்பார்கள். அவன் கேட்கிறான்:

*என்னடி மாது*
*இளைப்புகள் தோணுது?*
*போட்டபணி போதாதோ?*
*புதுப்பணிகள் வேணுமோ?*
*இட்டபணி போதாதோ?*
*எதிர்ப்பணிகள் வேணுமோ?*

அவள் பொன்னகை வேண்டுமென்று அழ வில்லையே! தன்னை அன்பு காட்டிப் பாதுகாப்பாருடைய புன்னகையைத் தானே வேண்டி நின்றாள்? ஆகவே,

போட்டபணி போதுங்காண்;
புதுப்பணி வேண்டாங்காண்;
இட்டபணி போதுங்காண்;
இனிப்பணி வேண்டாங்காண்

என்று விடை பகர்கிருள். 'அப்படியாளுல் இவள் எதற்காக வருந்துகிருள்? ஒருகால் தாய் தகப்பனுருடைய ஞாபகம் வந்து விட்டதோ? சிறு பெண் தானே?' என்ற யோசனையின்மேல் அவன் மறுபடியும் கேட்கிருன்:

தாயாரின் வீட்டுக்குப்
போகப் பிரியமுண்டோ?
அண்ணன்மார் வீட்டுக்குப்
போகப் பிரியமுண்டோ?

இதற்கும், "இல்லை" என்று பதில் வருகிறது.

தாயாரின் வீட்டுக்குப்
போகப் பிரியம்இல்லை;
அண்ணன்மார் வீட்டுக்குப்
போகப் பிரியம்இல்லை.

"பின்னே, இவ்வாறு அழுவதற்குக் காரணம் என்ன?" என்று அவன் வற்புறுத்தவே, அந்த மங்கை நல்லாள் உள்ள செய்தியை எடுத்துச் சொல்லத் தொடங்குகிருள்.

மாமியார் காச்சுவது
மாட்டிருக்கப் போவதில்லை;
நாத்தனர் காச்சுவது
நடுவிருக்கப் போவதில்லை;
கொழுந்தியார் காச்சுவது
கூடவிருக்கப் போவதில்லை;
ஓர்ப்படியாள் காச்சுவது
ஒத்திருக்கப் போவதில்லை;

இத்தனை காச்சலிலே
 என்னமாய் வாழுவேன்?

என்று புலம்பி நைகிருள். உண்மையை உணர்ந்த கணவன், "செல்வர் மனையிலிருந்து வந்த இவளை இப்படிச் செய்யலாமா?" என்று மெல்லத் தன் அன்னையிடம் வினவுகிருன்:

உழக்குப் பணம்கொண்டு
 ஊரறிய வந்தவளை
நாழிப் பணம்கொண்டு
 நாடறிய வந்தவளை
நாவற் பழத்தை
 நான்தின்னும் சக்கரையைக்
கோவைப் பழத்தைநீ
 கொண்டடைத்தால் ஆகாதோ?

"அப்படியா சமாசாரம்! இந்தச் சிறுக்கியை இவன் தலையில் தூக்கி வைத்துக் கொள்ளலாச்சா?" என்று மாமியாருக்கு ஆத்திரம் வருகிறது.

மறுநாள் விடியற்காலையில் வேண்டுமென்றே மாமியார் அதி சீக்கிரத்தில் எழுகிருள். நேரே மருமகள் படுத்திருக்கும் இடத்திற்குச் சென்று 'திருப்பள்ளியெழுச்சி' பாடுகிருள்.

கட்டில்விட் டிறங்காத
 கானக் கருங்குயிலே,
மெத்தைவிட் டிறங்காத
 மேனிக் கருங்குயிலே,
பொழுதும் விடிந்தது;
 பூவும் மலர்ந்தது;
முற்றம் தெளியாத
 மூதேவி, எழுந்திரடி.

வாசல் பெருக்காத
மாபாவி, எழுந்திரடி.

அந்தப் பேதைப் பெண் கண்ணை விழித்துப் பார்க்கிருள். கருங்குயிலே என்று ஆரம்பித்த அர்ச்சனை மூதேவி யென்றும் மாபாவி என்றும் முடிந்ததைக் கேட்கிருள். "எத்தனை நாள் இந்த மிரட்டலுக்குப் பயப்படுகிறது?" என்று அந்த அதிகாலையிலே எண்ணும் போது அவளுக்கு ஒருவகையான துணிச்சல் வந்து விடுகிறது.

எச்சில் தெரிக்குதத்தே
எட்டநின்று பேசும் அத்தே
துப்பி தெரிக்குதத்தே,
தூரநின்று பேசுமத்தே
மின்னுடி போல
மிரட்டாதே மாமியத்தே;
பின்னுடி போலப்
பேசாதே மாமியத்தே!

இந்த வார்த்தைகள் அவளிடம் பிறக்கக் காரணம் அவளுடைய கணவன் ஊட்டிய தைரியம் என்பதைக் கிழவி உணர்ந்து கொள்கிருள். காரியம் மிஞ்சி விட்டது. இனிமேல் அவள் அதிகாரம் செல்லாது! ஆகவே அவள்,

பார்த்தயடா பார்த்தயடா
பட்டழிவாள் சொன்னசொல்லை;
கேட்டயடா கேட்டயடா
கெட்டழிவாள் சொன்ன சொல்லை!

என்று பிரலாபிப்பதைத் தவிர வேறு ஒரு செயலும் இல்லை,

[இந்தப் பாட்டை எனக்கு உதவியவர், சங்ககிரி சுந்தரன்.]

# பஞ்சை மகளிர்

மெல்லியலார் என்று பெண்களைக் கூறுவதற்கு அவர்களுடைய உடலமைப்பு மட்டும் காரணம் அல்ல; அவர்களுடைய உள்ளக்கூறும் மென்மையுடையதே. உலகத்தில் வலிய வேலைகளையும் ஏற்றுக்கொண்டு புதுமைப் பெண்கள் ருஷ்யா முதலிய நாடுகளில் 'சரிநிகர் சமானமாக' உழைத்தாலும், ஆடவனுடைய உடலுறுதியும் உள்ள உறுதியும் அவர்களிடம் காண்பது அரிது. இயற்கையில் மென்மைக்கு இருப்பிடமாகப் பெண்ணுலகத்தைப் படைத்திருக்கிறான் பிரமதேவன்.

இந்த மென்மை காரணமாக, எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தாலும், வலிய ஆடவனது ஆட்சிக்கு அடங்கிப் போகும் இயல்பு அவர்களிடம் அமைந்து விடுகிறது. ஆடவர்கள் மெல்லியலாரை நாடும்போதெல்லாம் காதலுணர்ச்சி கொண்டே புகுகிறார்களென்றும் சொல்வதற்கில்லை. தம்முடைய இச்சையை நிறைவேற்றிக் கொள்வதையும் குடும்பப் பிரதிஷ்டை செய்வதையுமே முக்கிய நோக்கங்களாகக் கொண்டு ஆடவர் மகளிரை மணக்கிறார்கள். இந்த உண்மையை மறைப்பதிலும், காதலென்றும் லட்சிய வாழ்வென்றும் காவியம் பேசுவதிலும் பயன் இல்லை. உலகம் உலகந்தான்; "இருள் தருமா ஞாலம்" என்று பெரியோர்கள் தெரியாமல் சொல்லவில்லை. எத்தனையோ கால அநுபவத்தால் உணர்ந்து தெரிவித்த உண்மை அது.

பாமர மக்களில் ஆடவர்களின் மயக்கில் ஈடுபட்டுக் கண்டிக்கும் பெறுங்குக்கும் ஓடிப்போன பெண்கள்

எத்தனையோ பேர். 'கரும்புத் தோட்டத்திலே கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி' வருந்தும், மெல்லியலாரெல்லாம் கங்காணிக் கூட்டத்தாலும், காதலர் கூட்டத்தாலும் வஞ்சிக்கப்பட்ட மடமாதர்களே. சோற்றுக்கும் துணிக்கும், நகைக்கும் நட்டுக்கும் ஆசைப்பட்டுத் தம்முடைய நிலை குலைந்த ஏழை மங்கையர்கள் துயரத்தைக் காற்றுத்தான் முற்றக் கேட்டிருக்கும்; கவிஞரும் கேட்டிருப்பார். நாடோடிக் கவிஞனும் கேட்டிருக்கிறான்.

✱

வெள்ளைக்காரன் ஒரு தோட்டத்தைக் குத்தகைக்கு எடுத்தான். அதில் ஒரு வேலைக்காரனைக் கொண்டு வெள்ளரிக்காய் போடச் சொன்னான். வெள்ளரிக்காயைத் தாகந் தீர்க்கக் கொடுக்கிறது வழக்கமே ஒழிய விற்கிறதில்லை. ஆனால் வியாபாரமே குறியாக உடைய வெள்ளைக்காரன் அந்தக் காய்களைக் காசுக்கு இரண்டாக விற்கச் சொல்லிக் காகிதம் போட்டான்.

வேலைக்காரனுடைய மகள் வீராயி. அவள் வெள்ளரித் தோட்டத்தைப் பாதுகாத்துத் தண்ணீர் பாய்ச்சிப் பயிர் செய்த தன் தகப்பனுடன் இருந்து உழைத்தவள். தினைப் புனத்தைக் காத்த வள்ளியம்மையைப் போல வெள்ளரித் தோட்டத்தை வீராயி காத்தாள். வெள்ளரிக்காய் விளைந்தது. விற்றுப் பணம் சேர்த்து வைத்திருந்தான், அவள் தகப்பன்.

வெள்ளைக்காரன் வந்தான். வெள்ளரிக்காய் விற்ற பணத்தைத் தோட்டக்காரன் எஜமான் காலடியில் கொண்டு வைத்தான். தோட்டத்து எஜமானைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையாய் மறைவிலிருந்த வீராயி தலையை நீட்டினாள். தளதளவென்றிருந்த அவள் பருவ அழகு வெள்ளைக்காரன் கண்ணைப் பறித்தது. உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. வெள்ளரி விற்ற பணம்

அவனுக்கு ஒரு பெரிது அல்ல; மிகவும் சொற்பம். அதை அப்படியே தோட்டக்காரனுக்கு அளித்து விட்டான். "உன் மகளுக்கு நகை வாங்கிப் போடு" என்று கொடுத்துவிட்டான். இனமாக அல்ல. மெல்லிய லாளாகிய வீராயி அதன் பயனை 'வேசம் குலைந்தாள்!'

இந்தக் கொடுமையை நாடோடிக் கவிஞன் சொல்லி இரங்குகிறான் :

*ஓரான் ஓரான் தோட்டத்திலே-பிள்ளாய்*
*ஒருத்தன் போட்டது வெள்ளரிக்காய்*
*காசுக்கு ரெண்டு விற்கச்சொல்லிக்*
*காயிதம் போட்டான் வெள்ளைக்காரன்.*
*வெள்ளைக்காரன் பணம் வெள்ளிப்பணம்*
*வெள்ளிப் பணம்அது சின்னப்பணம்*
*வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்டுப்-பிள்ளாய்*
*வேசங் குலைந்தாளே வீராயி!*

வெள்ளரித் தோட்டத்தில் வேஷங் குலைந்த வீராயியை நினைந்து நாடோடிப் பாவலன் இப்படிப் பாடினான்.

கரும்புத் தோட்டத்திலே கற்புக் குலைந்த காரிகை யாரை நினைந்து பாரதியார் இரங்கினார் :

*நெஞ்சங் குமுறுகிறார்-கற்பு*
*நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே அந்தப்*
*பஞ்சை மகளிர் எல்லாம்-துன்பப்*
*பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு*
*தஞ்சமும் இல்லாதே-அவர்*
*சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்*
*மிஞ்ச விடலாமோ!-ஹே*
*வீரகராளி, சாமுண்டி காளி!*

என்று அந்த ஆவேசக் கவியின் துயரக் கொந்தளிப்பு உள்ளக் குமுறுதலோடு வருகிறது.

★

ஒரு மெல்லியலாள், இளம்பருவப் பாவை, ஒரு காளையிளங் கட்டழகனுக்கு வாழ்க்கைப்படப் போவதாகக் கனவு கண்டுகொண் டிருந்தாள். வெற்பையிடிக்குந் திற லுடைய திண்டோள் வீரன் ஒருவனுக்கு மாலையிட்டு வாழ்க்கையிலே சுவர்க்க இன்பத்தைக் காணவேண்டு மென்று அவள் நினைத்தாள். ஆனால் விதி வேறு வித மாக இருந்தது. அவள் தகப்பனும் தாயும் சேர்ந்து வஞ்சம் செய்துவிட்டார்கள். தந்திரமாகச் சதி செய்து அவள் கனவைக் கலைத்து இன்ப மாளிகையைத் தகர்த்து அவளைப் புழுதியிலே கிடக்க வைத்தார்கள்.

பல்லில்லாத கிழவன் ஒருத்தனுக்கு அவளை விற்று விட்டார்கள். அவளை, "முருங்கைக்கீரை பறித்து வா" என்று அன்று அனுப்பினார்கள். முள்ளில்லாக் காட்டில் முருங்கைக்கீரை பறிக்கப் போய் நெடுநேரம் அவள் பறித்தாள். அதற்குள் கிழவன் அவள் வீட்டிற்கு வந்து பரிசம் போட்டுக் கல்யாணத்தை நிச்சயம் செய்து கொண்டு போய்விட்டான்.

முருங்கைக்கீரையுடன் புகுந்த முத்துப் போன்ற அந்த இள நங்கைக்கு, "உனக்கு அடுத்த மாசம் கண்ணா லம்; உன் புருசன் அடுத்த வீட்டுக்காரன்" என்ற வார்த்தைகள் காதில் விழுந்தன, முருங்கைக் கொப்பைப் போல அவள் மனம் முறிந்துவிட்டது.

தாய் தகப்பனுக்கு அடங்கின பெண்ணாகையால் கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். அவளை, "ஏனம்மா வாழ்க்கைப்பட்டாய்?" என்று கேட்டால் அவள் என்ன சொல்கிறாள்? கேளுங்கள் :

*தக்காளித் தக்காளித்*
*தையல்முத்தே!*
*கிழவனுக் கேண்டி*
*வாழ்க்கைப் பட்டாய்?*

முள்ளில்லாத காட்டிலே
    முருங்கைக்கீரை பறிக்கப்போனேன்;
பல்லில்லாத கிழவன்வந்து
    பரிசம்போட்டான் தக்காளி!

முள்ளில்லாத காட்டுக்குப் போன வேளை நல்ல வேளை அன்று; பாவம்! இப்போது வாழ்க்கை முழுவதும் அவளுக்கு முள் நிரம்பிய காடு ஆகிவிட்டதே!

★

வார்த்தைகளிலும், வழங்கும் பொருளிலும் மயங்கி ஆடவருக்கு அடிமையாகும் பேதையர் எண்ணிறந்தோர். 'கண்ணே, முத்தே' என்று உள்ளம் உருக்கி வசப்படுத்தும் வஞ்சகர் பலர். ஏமாந்து போகும் ஏழையரைப் பொன்னென்றும், ஏமாற்றும் இரக்கமற்ற வன்னெஞ்சனைத் தட்டானென்றும் ஒரு பாடல் சொல்கிறது. தங்கத்தைப் பார்த்து நாடோடிப் புலவன் எச்சரிக்கிறன்.

தங்கச்சி யம்மா தைலம்மா
    தண்ணிக்குக் கிண்ணிக்குப் போகாதே;
தட்டான் கண்டால் பொன்னின்னிடுவான்.
    தட்டிலே வச்சு நிறுத்திடுவான்.
கும்பிட்டுத் தாலி கட்டிடுவான்.
    கோயில் மேளத்தைக் கொட்டிடுவான்!

வெளியில் தலைகாட்டினல் அடித்துக்கொண்டு போகத் தயாராக இருக்கிறனும் தட்டான்!

★

தின் தாயைக் காணவில்லையே வன்று ஓர் இளம் பெண் ஆற்றங் கரையிலே அழுதுகொண் டிருந்தாள். அந்தப் பக்கமாக வந்த திண்ணைப் பள்ளிக்கூடத்து வாத்தியார் அவள் அழுவதைப் பார்த்து இரங்கி. "அழாதே அம்மா!" என்று ஆறுதல் சொல்லித் தம் கையிலே இருந்த பிண்ணுக்கைக் கொடுத்துச் சென்றர்.

அவளுக்கு அதுதான் தின்பண்டம். அதைத் தின்று கொண்டிருந்தபோது கப்பல்காரன் ஒருவன் வந்தான். அவள் கழுத்தில் காசுமாலையைப் போட்டுக் கப்பலேற்றிக் கொண்டு போய்விட்டான். தாயைக் காணவில்லை என்ற அழுகை பிண்ணாக்காலே மாறியது; அதற்குப் பிறகு தாயைப் பிரிந்து கண்காணாத தேசத்துக்குப் போகும் நிலைமைக்கு அவளைக் காசுமாலை கொண்டு விட்டது. அவள் போன ஊரிலிருந்து அம்மாவை நினைத்து அழுதுகொண்டு சொல்கிறாள் :

*எலுமிச்சம் பழமே!*
*என்னைப்பெற்ற செல்லமே!*
*ஆற்றங் கரையிலே*
*அழுதுகொண் டிருந்தேன்.*
*அண்ணாவி வந்தான்;*
*பிண்ணாக்குத் தந்தான்;*
*தின்றுகொண் டிருந்தேன்.*
*கப்பல்காரன் வந்தான்;*
*காசுமாலை தந்தான்;*
*கப்பலேற்றி விட்டான்.*
*எலுமிச்சம் பழமே!*
*என்னைப்பெற்ற செல்லமே!*

★

ஏமாந்து போய் ஒருவனை நம்பிக் கைப்பிடித்தாள் ஒரு நங்கை. அதற்கு முன் தன் பிறந்த வீட்டில் வள வாழ்வில் இன்புற்றவள் அவள். தலை குனிந்து உடல் வளைந்து சிரமப்பட வேண்டிய அவசியம் அங்கே இல்லை. பூமியிலே பொன் கிடக்கிறதென்றால் அதை எடுக்கக் கூடத் தலை குனிய மாட்டாள். அவ்வளவு மானமாக, மரியாதையாக வளர்ந்தவள்; அவனைக் கைப்பிடித்தாள். அவன் அவளைச் சந்தியிலே நிறுத்திவிட்டு எவளையோ

இழுத்துக்கொண்டு ஓடிவிட்டான். அவனுக்கு மானம் இல்லை, பழியில்லை. அவனால் வந்த பழி அவள் தலையைக் குனியச் செய்தது. இதை அவள் சொல்லுகிருள். சுண்ணும்பு இடிக்கும் பெண்கள் பாடும் பாட்டு ஒன்றில் வரும் பகுதி இது[2]:

*பொன்னு நல்ல-ஏலேலோ*
*கிடக்குதுன்னு*
*பூமியிலே-ஏலேலோ*
*குனியமாட்டேன்.*
*புத்திகெட்ட-ஏலேலோ*
*பையனாலே*
*பூமியிலே-ஏலேலோ*
*குனிந்தேனே நான்!*
*தங்கம் நல்ல-ஏலேலோ*
*கிடக்குதுன்னு*
*தரையிலுமே-ஏலேலோ*
*குனியமாட்டேன்.*
*சாடுமாறி—ஏலேலோ*
*பையனாலே*
*தரையிலுமே-ஏலேலோ*
*குனியலாச்சே!*

பஞ்சை மகளிர் படும் பாட்டையும் ஏமாந்த விதத்தையும் நாடோடிப் பாடல்கள் வெள்ளைச் சொற்களால் சொல்கின்றன; அவற்றில் உள்ளத்தைக் காண்கிறோம்; உருகுவதற்கும் பொருள் உண்டு.

# பொங்கல் களியாட்டம்

பொங்கல் திருநாள் நிறைவுக்கும் புதுமைக்கும் அடையாளம். "பால் பொங்கிற்ரு?'' என்று கேட்டுச் செல்வம் பொங்கி நிறைந்த மகிழ்ச்சியைத் தெரிந்து கொள்ளும் திருநாள் இது.

தொழிலாளிகளுக்கு ஓய்வு நாள் இது. இந்திய நாட்டின் தலைமைத் தொழில் வேளாண்மை. உழுது பயிரிடும் குடிமக்கள் தங்கள் தொழிலில் வெற்றியைக் கண்டு குதூகலிக்கும் நல்ல நாள் தைப் பொங்கல். குயவன் புது மண்கலம் தருகிருன். புதுநெல்லைக் குத்திப் புது வெல்லத்தையும் புதுப் பயற்றையும் கொண்டு புதுப் பால் கறந்து புதுப் பொங்கல் வைத்துப் புதுக்களிப்பில் மூழ்குவது தமிழர் வழக்கம்.

காடு கரைகளில் வேலை செய்யும் பெண்களுக்கு இது உல்லாசத் திருநாள்; கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து குரவையிட்டுக் கும்மியடித்து ஆடிப் பாடிக் கொண்டாடும் பண்டிகை.

வாரிய தலையில் கொண்டையிட்டுப் பூவைச்செருகிப் புதுச்சேலை உடுத்து மடமங்கையர் புறப்படுவார்கள். ஆவாரம் பூவும் அரிசியும் கொண்ட பிரப்பங்கூடையை இடையிலே இடுக்கிக்கொண்டு ஒருத்தி கூட்டத்தினருக்குத் தலைமை தாங்கி நடப்பாள். பண்ணைக்காரர் வீட்டிற்கும் மற்றச் செல்வர்கள் வீடடிற்கும் சென்று அவர்கள் வீட்டு வாயிலும் முற்றத்திலும் கூடையை நடுவில் வைத்துக் கொண்டான் அடிப்பார்கள்.

அவர்கள் கையைக் கொட்டிக் கும்மி அடித்துச் சுற்றிச் சுற்றி வருவார்கள். அவர்கள் பாடும் பாட்டில் மிகவும் அபூர்வமான கருத்து இருக்குமென்று சொல்வதற்கில்லை. ஆனால் அந்தப் பெண்கள் 'வளைக்கரங்கள் தாம் ஒலிக்கக் கொட்டி இசைத்திடும் ஓர் கூட்டமுதப் பாட்டினில்' தாளம் இருக்கும். அவர்கள் குதித்துக் குதித்துப் பாடும் பாட்டில் துள்ளல் ஓசை இருக்கும்.

கன்னியாகுமரி முதல் சென்னை வரையில் இந்த வழக்கத்தைக் காணலாம். தமிழன்னையின் உடம்பு முழுவதும் ஒரே உயிர்தானே பரவியிருக்கிறது?

★

மார்கழி மாதத்தில் வைஷ்ணவர்கள் ஆண்டாள் அருளிய திருப்பாவையைப் பாடுவார்கள். பெண்களெல்லாம் சேர்ந்துகொண்டு திருமாலை வணங்குவதற்கு முன் நீராடப் போவதற்காக ஒருவரை ஒருவர் அழைப்பது போலச் சில பாடல்கள் அமைந்திருக்கும். திருவாசகத்திலும் 'திருவெம்பாவை' என்று ஒரு பகுதி இந்த மாதிரியே உண்டு.

"இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறாயே! நான்தான் முதலில் எழுந்து வந்து உன்னை எழுப்புகிறேன் பார் என்று நேற்று வீறு பேசினாயே! அந்தப் பேச்செல்லாம் இப்போது எங்கே போயிற்று?" என்று பெண்கள் சொல்லித் தம் தோழிகளை எழுப்புவதாகச் சில பாடல்கள் அதில் வரும்.

பழங்காலத்தில் தை மாதத்தில் பெண்கள் கூட்டமாகக் கூடி நீராடி வரும் வழக்கம் இருந்தது. கன்னிப் பெண்கள் அதை விரதமாகவே கொண்டிருந்தனர். தைந் நீராடல், அம்பாவாடல் என்று அந்தப் புனிதச் செயலைப் பழைய இலக்கியங்கள் குறிக்கின்றன.

நாகரிக வாழ்க்கையில் விளங்கும் நாரீமணிகள் கடவுளைத் தொழுவதற்கு முன்னே ஒருவரை ஒருவர் எழுப்பிக்

கூட்டம் கூடுவார்கள். தைப் பொங்கலில் அவர்கள் கூடுவதற்குத் தைந்நீராடுதல் காரணம். உழுதொழிலும் கூலி வேலையும் வாழ்க்கைப் பணியாகக் கொண்ட மங்கையருக்குத் தைந்நீராட்டு உண்டோ என்னவோ, தெரியாது. ஆனால், தைப் பொங்கல் உண்டு. அவர்களும் ஒருவரை ஒருவர் அழைத்துக் கூடுவார்கள்.

மார்கழி தை மாதங்களில் இலந்தைப் பழம் பழுக்கும். ஆற்றங்கரையில் உள்ள படுகைகளிலும் காடுகளிலும் இயற்கையாக இலந்தைமரங்கள் வளர்ந்திருக்கும். சிறுவரும் சிறுமியரும் ஏழை மக்களும் காலையில் எழுந்து சென்று, அந்தப் பழத்தைப் பொறுக்கி வருவார்கள். ஏழைப் பெண்மணிகள் அதைக் கூறு கட்டி வைத்து விற்பதும் உண்டு.

இலந்தைப் பழம் பொறுக்குவதே நாலு பேர் கூடிச் செய்தால் விளையாட்டாகி விடுகிறது. தை மாதத்தில் கும்மியடிக்கும் பெண்களுக்கு இலந்தைப் பழம் பொறுக்கும் உற்சாகம் உண்டாகிறது. அதன் பொருட்டு ஒவ்வொருத்தியும் தன் தோழியை அழைக்கிறாள்.

பொங்கல் பாட்டு இலந்தை பொறுக்கும் அழைப்பில் ஆரம்பிக்கிறது. பிறகு புடைவையைப் பற்றிச் சொல்கிறது. ஏழைப்பெண் நல்ல புடைவை யென்று ஒன்றைப் பாதுகாத்து வைக்கிறாள். அதை இன்று எடுத்துக் கட்டிக்கொள்ளலாம் என்று நினைக்கிறாள். போட்டு மடித்துப் பெட்டியிலே வைத்த அதைப் பற்றிப் பாட்டு ஞாபகப் படுத்துகிறது.

*அம்மாயி! அம்மாயி!*
*ஏண்டி ஏண்டி அம்மாயி!*
*ஏக்கமா இருக்கயா?*
*தூக்கமா இருக்கயா?*

கஞ்சா மயக்கமா?
கள்மயக்கந் தோணுதா?
ஏரி கரையிலே
இலந்தை பழுத்திருக்கும்.
ஏறி உலுக்கலாம்
எஞ்சோட்டுச் சின்னண்ணு;
பாத்துப் பொறுக்கடி,
பாதகத்தி அம்மாயி! -
அம்மாயி! அம்மாயி!
ஏண்டி ஏண்டி அம்மாயி!

பத்துப் பணத்திலே
முத்துவண்ணம் கொண்டது
போட்டு மடிச்சது;
பொட்டியிலே வச்சது;
கறையான் கடிக்குதுன்னு
கட்டிவச்ச அம்மாயி!
பூரான் கடிக்குதுன்னு
போற்றிவச்ச அம்மாயி!
அம்மாயி! அம்மாயி!

இது கரூர்ப் பக்கத்தில் பாடும் பாட்டு.

கடலோரத்தில் உள்ள சென்னைப் பக்கத்திலே பொங்கல் பாட்டிலே கப்பல் வருகிறது. பொங்கல் பூசைக்கு வேண்டிய கரும்பு வருகிறது. சுவாமிக்கு மலர் சாத்தும் வழக்கம் வருகிறது. பறங்கிக்காரன் வருகிறான்.

ஒருகட்டுக் கரும்பாம்-பறங்கி
ஒண்ணுலே இரும்பாம்.
அந்தக்கட்டுக் கரும்பைப்-பறங்கி
ஏத்துடா கப்பலிலே.

கப்பலும் பத்தாமே-கலைகடல்
ஓடமும் பத்தாமே
கப்பலுடைக்கிற சின்னத் துரைமகன்
எப்ப வருவாரோ!
வந்தால் வராண்டி-சிந்தாமணி
பார்க்க அல்லவடா!
ரெண்டுகட்டுக் கரும்பாம்-பறங்கி
ரெண்டாலே இரும்பாம்
அந்தக்கட்டுக் கரும்பைப்-பறங்கி
ஏத்துடா கப்பலிலே
.........................
பார்க்க அல்லவடா!

★

ஒருமரக்கால் இரும்பளந்து
ஓரடித் தோட்டம் கரும்புநட்டு
கரும்பும் இல்லை கணுவும் இல்லை;
கரணைத் தோட்டம் மரணம் இல்லை.

★

ஒருகடையாம் பலசரக்காம்
சந்நிதியாம் சதுரானை
கோபுரத்து வேல்முருகா!
என்னபுஷ்பம் சாத்தலாம்?
மல்லிகைப்பூ மருக்கொழுந்து
மலர்ந்தபுஷ்பம் சாத்தலாம்.

★

ஒருமரந் தோப்பாம்—ஒரு
புன்னைமரம் காய்ப்பாம்.
புன்னைமரம் பூவெடுத்தால்
போகலாமடி கன்னிகளா!

ரெண்டுமரந் தோப்பாம்; ரெண்டு
புன்னைமரம் காய்ப்பாம்.

.....................
போகலாமடி கன்னிகளா!

★

ஒருகட்டுச் சந்திலே நாங்கள் இருப்போம்;
ஒருகட்டுத் தாழம்பூ நாங்க முடிப்போம்;
வாதாடி-நாம்ப-சூதாடி
ரெண்டுகட்டுச் சந்திலே நாங்கள் இருப்போம்
............சூதாடி..

★

ஒருஇலை பறிச்சு முன்னே மடிகோலி
ஒருபணத்துக்கும் ஒருஇலைக்கும்
தாழ்ந்ததடி தத்தாங்கி.

★

ஓரம்மிப் பூவுருட்டி அரைக்கும்பொடி மஞ்சள்
மாருக்கும் தோளுக்கும்
மஞ்சள் சரட்டுக்கும்
மோதிரக் காலுக்கும்
நீலவர்ணப் பொட்டுக்கும்

★

ஒருசரமாம் இரைமணி
ஆதி யம்மன் சோதி
அம்மான் மகள் ராணி
உப்பளக்கும் மேடை
ஒதிய மரம் சாலை
விளையாடப் பெண் பிறந்தாள்
கமலக் கண்ணி மேடை!

★

ஒரு மரத்தை வெட்டி ஒரு
மாமரத்தை ஊஞ்சல் கட்டி
ஊஞ்சல் கீழே குந்தியிருக்கும்
ஆண்கிளியோ பெண்கிளியோ
ஆடவந்த பேய்க்கிளியோ!

★

ஒருஇலுப்பை கீழே இருக்க
கூவா கூவா முதற்பறவை
வடக்கே தெற்கே கோழிவெல்லும்
வடக்கே ஒரு சிந்தாமணி
வகை வகையாப் பூப்பூக்கும்
வரிவரியாப் பழம் பழுக்கும்
தின்னத் தின்ன நல்லாருக்கும்
தேசம் எல்லாம் நிறஞைஞ்சிருக்கும்
கூவுது மயில் கூவுது பாரு
கொண்டை முசலேறிக் கூவுது பாரு
ஆத்துக்குப் போற ஐயாசாமி
தோப்பன் வரக் கூவுது!

★

கல்லு மலைமேலே கல் அடுக்கிக்
கல்லாரக் கோயிலை உண்டுபண்ணி
மதுரைக் கோபுரம் தெரியக் கட்டி
மருது வாறதைப் பாருங்கடி
மருது வந்தாலும் தேரோடாது
மச்சினன் வந்தாலும் தேரோடாது
தேருக்குடையாரு குப்புசாமிப்பிள்ளை
தேரோடுந் தோட்டம் தேரோடுது!

[இந்தப் பாடல்களை எனக்குச் சொன்னவள்
மந்தைவெளி எல்லம்மாள்.]

R.F. 103 36 38 15 PIV+92